விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 08 சனிக்கிழமை (22.03.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 093

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## ரி.ஐ. டியினரால் குடும்பஸ்தர் கைது

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் (ரி.ஐ.டி) வடமராட்சி பகுதியில் மேலும் ஒரு குடும்பஸ்தர் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

கரணவாய் வடக்கு கொற்றாவத்தையைச்சேர்ந்தமூன்றுபிள்ளைகளின் தந்தையான துரை ஜெயக்குமார் (வயது 42) 02ஆம் பக்கம் பார்க்க..

# இலங்கைக்கு எதிராக குவியும் அறிக்கைகள்

## மற்றுமொரு அறிக்கை ஐ.நாவில் தாக்கல்

(ஜெனிவா)

2009 ஆம் ஆண்டு இறுதிப் போருக்கு பின்னர் இலங்கையில் தமிழ் மக்கள் பல்வேறு வகையில் பாலியல் துன்புறுத்தல் உட்பட பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக இங்கிலாந்து மனித உரிமைக் குழு தெரிவித்துள்ளது.

போருக்குப் பின்னர் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான அறிக்கை ஒன்றை இந்தக் குழு ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் வழங்கியுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்கவும்...)

## அமெரிக்க பிரேரணையை இந்தியா ஆதரிக்கும்

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கை மீதான பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்கவுள்ளது. இதற்காக தனது பிரதான வெளிநாட்டுக் கொள்கை தீர்மானத்தை ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் எடுத்துள்ளதாக அறிய வருகின்றது.

மேற்படி பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்கத் 19ஆம் பக்கம் பார்க்க..

## காணாமல் போனோரை கண்டுபிடித்து தாருங்கள்

### மன்னாரில் நேற்று உண்ணாநிலை போராட்டம்



(குருமன்காடு)

காணாமல் போனவர்களை கண்டுபிடிக்குமாறு கோரியும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் அடையாள உண்ணாவிரத போராட்டம் ஒன்று மன்னார் பொது விளையாட்டு அரங்கு மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த உண்ணாவிரதத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப், தமிழ்த் 02ஆம் பக்கம் பார்க்க..

## மகிழ்ச்சியான நாடுகள்; இலங்கைக்கு 137-ம் இடம்

(கொழும்பு)

உலகின் ம்கிழ்ச்சியான நாடுகளின் வரிசையில் இலங்கை 137-ம் இடத்தை வகித்து வருகின்றது, ஐக்கிய நாடுகள் அமைப்பு மார்ச் 20-ம் திகதியினை உலக மகிழ்ச்சி தினமாக அறிவித்துள்ளது.உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த பட்டியலில் இலங்கை மிகவும் பின்னிலையில் காணப்படுகின்றது.

உலகின் மிக மகிழ்ச்சியான நாடுகளின் வரிசையில் டென்மார்க், நோர்வே மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் முதல் மூன்று இடங்களையும் வகிக்கின்றன.உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் கடைநிலை வரிசையின் இருபது 02ஆம் பக்கம் பார்க்க..

### ஆசிரியர் நிரூபன் படுகொலை

## நீதியான விசாரணை கோரி யாழில் நேற்று ஆர்ப்பாட்டம்!




(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் நிரூபனின் படுகொலைக்கு நீதி விசாரணை நடத்தக் கோரியும் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரின் கைதுகளை கண்டித்தும் யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக பாரியளவிலான கண்டன ஆர்ப்பாட்டமும் ஊர்வலமும் நடத்தப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று பி. ப. 2 மணியளவில் இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

வவுனியா நெடுங்குளம் அல் - அமிஸாமுஸ்லிம் மகா வித்தியாலய 20ஆம் பக்கம் பார்க்க..

## எனது மூன்று சகோதரர்களை படையினரே கடத்திச் சென்றனர்

### ஆணைக்குழு முன் சகோதரி சாட்சியம்

(மட்டக்களப்பு)

என்னுடைய சகோதரர்கள் 3 பேரை முறக்கொட்டான்சேனை இராணுவ முகாமிலிருந்து வந்த படையினரே மட்டக்களப்பு சித்தாண்டி முருகன் கோயிலடியில் வைத்து, வாகனத்தில் ஏற்றிச் சென்றனர் என சகோதரியொருவர் கண்ணீர் மல்க நேற்றுச் சாட்சியமளித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விசாரணைகளை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த சகோதரி தனது சாட்சியத்தில் குறிப்பிடுகையில்,

1990ஆம் ஆண்டு யூலை மாத இறுதியில் மட்டக்களப்பின் முறக்கொட்டாஞ்சேனையில் எங்களது காணி அடங்கலான பிரதேசத்தில் இராணுவம் முகாமிட்டது. அதனால் அப்போது நாங்கள் கொஞ்சம் தூரத்திலுள்ள சித்தாண்டி முருகன் கோவிலுக்கு பாதுகாப்புக்காகச் சென்று தங்கினோம். எங்களைப் போல் அதிகமானவர்கள் வந்தமையினால் அது அகதி முகாமாக இயங்கியது.

அந்த முகாம் ஆரம்பித்து சில நாட்களில் ஒகஸ்ட் 02ஆம் திகதி வாகனங்களில் வந்த இராணுவத்தினர் அப்பிரதேசத்தைச் சுற்றி வளைத்து அங்கு கொண்டு வரப்பட்டிருந்த முகமூடி பொம்மையாக இருந்தவரிடம் ஒவ்வொருவராகக் காட்டி எனது அண்ணன் வீரபத்திரர் பொன்னுத்துரை, வீரபத்திரர் அருள்நாதன், வீரபத்திரர் சசிதரன் ஆகியோர் உட்பட 17பேரை வாகனங்களில் ஏற்றிச் சென்றனர்.

இராணுவத்தின் காலில் விழுந்து எங்களது சகோதரங்கள் எந்தத் தொடர்பும் இல்லாதவர்கள். அவர்களை விட்டு விடுங்கள் என அழுதோம். விசாரணை இருப்ப 20ஆம் பக்கம் பார்க்க..

## மனித உரிமை ஆர்வலர்கள் ஊடகங்களிடம் பேசத் தடை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்பு சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டு பின்பு விடுதலை செய்யப்பட்ட இரண்டு மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஊடகங்களிடம் பேசுவதிலிருந்து தடை விதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அருட்தந்தை பிரவீன் மகேசன் மற்றும் ருக்கி பெர்ணாண்டோ ஆகிய இருவரின் கடவுச்சீட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அவர்களது விடுதலை நிபந்தனையற்றது என்று அவர்களிடம் கூறப்பட்டிருந்தது.

ஆனால்,பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார், நீதிமன்றத்தை அணுகி இந்த ஆர்வலர்கள் ஊடகங்களுடன் பேசுவதற்குத் தடையை வாங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அவர்களது கணினிக 20ஆம் பக்கம் பார்க்க..

Ranjanas
CERAMIC
For Quality Tiles & Sanitaryware
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு.
SALE
UP TO 30% OFF
# 212, Palaly Road, Jaffna / #05, Stanley Road, Jaffna.
Tel:- 021 222 0033 / 021 222 4777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை...

தமிழர்களிடம் நடத்தப்பட்ட விசாரணை நேர்காணல்களை அடிப்படையாக கொண்டு இந்த அறிக்கையை இங்கிலாந்து மனித உரிமை குழு தயாரித்துள்ளதாக திகார்டியன் பத்திரிகை தெரிவித்துள்ளது.

புகலிடம் கோரி அவுஸ்திரேலியாவுக்கு சென்ற இலங்கையர்கள் பலர் அங்கிருந்து மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவ்வாறு திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட தமிழர்கள் இலங்கையில் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இங்கிலாந்து மனித உரிமை குழுவின் இந்த அறிக்கையை இலங்கைக்கு எதிரான மேற்குலக நாடுகள் வெளியிட்டுள்ளன.

110 பக்கங்களை கொண்ட இந்த அறிக்கை தொடர்பில் இலங்கைக்கு எதிராக குரல் கொடுத்து வரும் தென் ஆப்பிரிக்க பேராயர் டெஸ்மண் டுட்டுவும் கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர் தமிழர்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பாக புதிய அறிக்கை ஒன்றின் மூலம் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

போருக்கு பின்னர், கட்டாய வாய்வழி புணர்ச்சி, குதவழி வல்லுறவு, தண்ணீர் சித்திரவதை உள்ளிட்ட பாலியல் மற்றும் உடல் ரீதியான கொடுமைகள் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடு கடத்தப்பட்ட புகலிட கோரிக்கையாளர்களின் சாட்சியங்களும் உள்ளடக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையில் அவுஸ்திரேலியா தமிழர்களை நாடு கடத்துவது தொடர்பிலும் கேள்வி எழுப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமை குழு, மனித உரிமை சட்டத்தரணி யஸ்மின் சூகா, உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டம் ஆகியோர் இணைந்து இந்த அறிக்கையை தயாரித்துள்ளனர்.

இரும்பு குழாய்களினால் தாக்கபட்ட, சிகரெட்டுக்களால் சுடப்பட்ட மற்றும் சூடான பொருட்களினால் உடலில் முத்திரை பதிக்கப்பட்டு துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்ட தமிழர்களின் சாட்சியங்கள் இதில் உள்ளடக்கப்படடுள்ளன.

இலங்கை படை அதிகாரிகளினால தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்ட 40 பேரிடம்இருந்து பெறப்பட்ட விசாரணை நேர்காணல்களின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அனைத்து சித்திரவதைகளும் கிட்டத்தட்ட சில பாலியல் வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களில் பலர் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட புகலிட கோரிக்கையாளர்கள். இலங்கை திரும்பிய இவர்களிடம் தஞ்சம் பெறுவதற்கான முயற்சிகள் மற்றும் அவுஸ்திரேலியாவில் இருக்கும் நெருக்கமான உறவுகள் பற்றி விசாரிக்கப்பட்டுள்ளனர்.

2012 ஆம் ஆண்டு முதல் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட புகலிட கோரிக்கையாளர்களில் பலர் சட்டத்தரணிகளின் அணுகலுடனோ அல்லது சாதாரண விதிமுறைகளின் அடிப்படையிலோ அணுகப்படவில்லை.

தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்டு வரும் சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள், பாலியல் வன்முறைகளில் இந்த அறிக்கையானது சிறிய மாதிரி மாத்திரமே என யஸ்மின் சூகா தெரிவித்துள்ளார். (செ-11)

# மகிழ்ச்சி..

இடங்களில் ஒன்றையே இலங்கை வகித்து வருகின்றது. தென் ஆசிய பிராந்திய வலயத்தில் இலங்கை மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்படுகின்றது. அண்டை நாடான இந்தியா 111-ம் இடத்தை வகிக்கின்றது.

மாலி, உகண்டா, பலஸ்தீனம், சிம்பாவே, ஹெய்ட்டி, சூடான் ஆகிய நாடுகளின் வரிசையில் இலங்கையும் இடம்பிடித்துள்ளது. உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் வரிசையில் அமெரிக்கா 17-ம் இடத்தை வகிக்கின்றது. கடைசி இடமான 156-ம் இடத்தை ஆபிரிக்க நாடான டோகோ வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# ரி.ஐ.டி...

என்ற குடும்பஸ்தரே அவரது வீட்டில் வைத்து நேற்றுஇரவு 7 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தச்சுத்தொழிலாளியான பிரஸ்தாப குடும்பஸ்தர் வேலை முடிந்து வீடு திரும்பியிருந்த வேளை மோட்டார் சைக்கிள்கள், ஜீப் சகிதம் வந்து இறங்கிய பயங்கரவாத குற்றதடுப்பு பொலிஸார் கைதிற்கான உறுதிப் படுத்தும் அறிவித்தல் பற்றுச் சீட்டை (சிங்களத்தில்) மனைவியிடம் கொடுத்து விட்டு கணவனை கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உணவு கொடுத்து உதவியமை, தொடர்புகளை பேணியது தொடர்பாக பிரஸ்தாப குடும்பஸ்தர் மீது ரி.ஐ.டி யினரால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த நபரை கைது செய்த வேளை உறவினர்கள் கதறி அழுததாகவும் ஆனால் அதனை பொருட்படுத்தாத அவர்கள் மேற்படி பற்றுச் சீட்டை கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்று விட்டதாகவும் உறவினர்கள் கூறினர்.

கைதான குடும்பஸ்தர் முதலில் வல்வெட்டித்துறைபொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் விசாரணைக்காக வவுனியா பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவின் அலுவலகத்திற்கு கொண்டு செல்லப் பட்டுள்ளார்.

வடக்கில் கடந்த சில நாட்களாக ரி.ஐ.டியினரின் கைது நடவடிக்கைகள் அதிகரித்து வரும் நிலையில், நேற்றுமுன் தினம் இரவு வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி முள்ளியைச் சேர்ந்த கடற்றொழிலாளியான சபாரட்ணம் ரமேஷ் (வயது 40) என்ற குடும்ப ஸ்தரே கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-24)

# காணாமல்...

தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைகலநாதன், வினோநோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், பா.அரியநேந்திரன், வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், கல்வியமைச்சர் குருகுலராஜா, போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட செயலாளர கோபாலகிருஷ்ணன், ஜனநாயக மக்கள் முன்னணியின் பேச்சாளர் பாஸ்கரா , வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், மதகுருமார்கள், பொதுமக்கள், பாதிக்கப்பட்ட குடும்ப உறவினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது "இராணுவத்திடம ஒயடைக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே", "தமிழ் மக்களுக்கு மனித மாண்போடு கூடிய நீதியான தீர்வு வேண்டும்", "மனித புதைகுழிகள் தொடர்பான சுயாதீன விசாரணையை உறுதிப்படுத்து", "போர்க்குற்றம் மற்றும் மனித இனத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றத்திற்கான சர்வதேச விசாரணையை உறுதிப் படுத்து" ஆகிய சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்தனர் (செ-11)

## செம்மணி மயான அபிவிருத்திகூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.செம்மணி இந்து மயான அபிவிருத்தி தொடர்பான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (செ)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532



## ஏழாம் ஆண்டு நினைவுகள்

தோற்றம் 07 03 1980 — மறைவு 22 03 2007



அமரர் பேரின்பநாதன்
தயானந்தன் (நந்தன்)

குடும்பத்தின் தலைமகனாய் குவலயந் தனில் பிறந்து
உடன் பிறந்த சகோதரர்க்கு உற்ற துணையாக வளர்ந்து
பஞ்ச பாண்டவரென மகிழ்ந்திருக்க
வஞ்சமிகு காலன் உனைக் கவர்ந்து ஆண்டேழு ஆனதடா நந்தா!
போதாத காலமது எமைச் சூழ்ந்ததினால்
தூணாக நின்ற மகன் துணையிழந்து போனோமோ?
ஆறாத் துன்பம் தானெங்கள் விதியாச்சோ?
நீறாகிப் போனாலும் என்றும் எம்
நினைவுகளில் நீ வாழ்வாய்

என்றும் உன் ஆன்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர். முதலாம் வட்டாரம், மண்டைதீவு.

(5873)



## பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தில் கீழ்க் காணும் பணிநிலை வெற்றிடம் உண்டு.

**நாடகம் அரங்கியலை பிரதான பாடமாகக் - கொண்ட பட்டதாரி ஆசிரியர்கள்**

உணவு, தங்குமிடம் என்பன ஒழுங்கு செய்து தரப் படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத் தில் தங்கியிருந்து சேவைபுரிய விருப்பம் கொண்ட நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியமும் உள்ளவர்கள் மட்டும் தங்களது கல்விச்சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.

(சி-6816)

தொடர்புகளுக்கு:-
தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொலைபேசி இலக்கம்:-0770604950, 0214923118



## சேவை நலன் பாராட்டு



திருமதி சிவதேவி யோகேஸ்வரன்
(SLTS 2 - I)

எமது பாடசாலையின் பழைய மாணவியும் இப்பாடசாலையிலேயே கடந்த 36 வருடங்கள் தொடர்ச்சியாக அளப்பரிய ஆசிரிய சேவையாற்றியவருமான திருமதி சிவதேவி யோகேஸ்வரன் அவர்கள் இன்று 22.03.2014 சனிக்கிழமை தொடக்கம் பணி ஓய்வு பெறுகின்றார். இவரின் ஓய்வுக்காலம் சிறப்பாகவும் நலமாகவும் அமைய எல்லாம் வல்ல சோமாஸ் கந்தப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றோம்.

யா/ஸ்ரீ சோமாஸ்
கந்தக் கல்லூரி,
புத்தூர்.

ஆசிரியர் வலம்புரிக் கழகம்

(5872)



## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

கடந்த 11.02.2014 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது இதயத் தெய்வங்கள்

அமரர்
சின்னத்துரை பரமேஸ்வரி
சுஜிகரன் ஸஸ்மிதா
சுஜிகரன் பதுமன்





ஆகியோரது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 22.03.2014 சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 23.03.2014 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் (பழனி ஆண்டவர் லேன், கோண்டாவில் கிழக்கு) முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பழனி ஆண்டவர் லேன்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

நன்றி

சு.ஜெயக்குமாரன்,
சி.கதிர்காமநாதன்

(சி-6799)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தலையீடுகளுக்கு அரசின் தலைவர்களே காரணம்

## சாட்டுகிறார் ரவி கருணாநாயக்க எம்.பி

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சியின் ஆலோசனையின் படி செயற்பட்டிருந்தால் ஜெனீவா பிரச்சினை அரசாங்கத்துக்கு இந்தளவு பாராதூரமான பிரச்சினையாக மாறியிருக்காது என அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தில் இருக்கும் பண்டிதர்கள் இறுதியில் ஜெனிவா பிரச்சினையை பாரதூரமானதாக மாற்றிக்கொண்டுள்ளனர்.

அரசாங்கம் சர்வதேசத்திற்கு வாக்குறுதிகளை வழங்கியது. ஆனால் அவற்றை நிறைவேற்றவில்லை. குறைந்தபட்சம் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் குறித்தும் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை.

அரசாங்கத்தின் தலைவர்களே சர்வதேச நாட்டில் தலையீடுகளை மேற்கொள்ள வழியை திறந்து விட்டனர்.

அரசாங்கத்தின் வினைதிறனின்மை மற்றும் காரண காரியங்களை சரியாக புரிந்து செயற்படாமை என்பனவே இந்த பிரச்சினைகளுக்கான காரணம்.

சனல்-4 தொலைக்காட்சியின் பிரச்சினை ஏற்பட்ட போது அரசாங்கம் நீதிமன்றத்தின் ஊடாக செயற்பாடுகளை முன்னெடுத்திருக்க வேண்டும்.

அரசாங்கம் இது குறித்து அக்கறை செலுத்தாவிட்டால், அந்த பொறுப்பை எமக்கு தாருங்கள் அரசாங்கத்தின் சார்பில் நாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கின்றோம் என்று பொறுப்பான எதிர்க்கட்சி என்ற வகையில் நாங்கள நாடாளுமன்றத்தில் வைத்து அரசாங்கத்திற்கு கூறியிருந்தோம்.

எனினும் அரசாங்கம் அதனை பொருட்படுத்தவில்லை. அன்று உரிய நடவடிக்கை எடுத்திருந்தால், இன்று இந்த பாரதூரமான நிலைமை ஏற்பட்டிருக்காது.

இவை வீணாக ஏற்படுத்திக் கொள்ளும் பிரச்சினைகள் என ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (2)

# ஆட்சியாளர்கள் சம்பாதிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்

அரசாங்கம் காட்டில் இருக்கும் அப்பாவி யானைகளை கூட சுதந்திரமாக இருக்க விடுவதில்லை எனவும் அவற்றையும் விற்று பிழைப்பதாகவும் ஜே.வி.பியின் மேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளர் கே.டி. லால்காந்த குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்திற்குள் பிரச்சினைகள் இருக்கின்றன.

இதன்காரணமாகவே வெளியில் இருந்து பிரச்சினைகள் வருகின்றன.

நாட்டின் இன்றைய ஆட்சியாளர்கள் சம்பாதிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதனால் இவர்கள நாட்டை பற்றி சிந்திப்பதில்லை.

காட்டில் சுதந்திரமாக வாழும் யானையையும் இவர்கள் விட்டு வைப்பதில்லை. அதனையும் விற்று பிழைக்கின்றனர்.

வனஜீவராசிகள் துறைக்கு பொறுப்பான அமைச்சர் அதிகாரிகளுடன் இணைந்து இதனை மேற்கொண்டு வருகிறார்.

விலங்குகள் முதல் செடி கொடிகள் வரை சகலவற்றையும் விற்பனை செய்கின்றனர் என்றார். (2)


## காணி/ வீடு விற்பனைக்கு

**யாழ்ப்பாணம்** (காணி/ வீடு விற்பனைக்கு)
யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத் தெருவில் 3 பரப்பு 13 குளி காணி (கிணறு, பயன்தரு மரங்களுடன்) விற்பனைக்குண்டு.
(A/004)

**கொக்குவில்** (காணி விற்பனைக்கு)
கொக்குவில் கிழக்கு கோணாவளை ஒழுங்கையில் 1 3/4 பரப்புக் காணி (பிராமணக் குடும்பங்களுக்கு ஏற்ற சூழல் உடன் விற்பனைக்குண்டு.
(A/010)

**கொடிகாமம்** (காணி விற்பனைக்கு)
கொடிகாமம் ஐயனார் கோவில் வீதியில் 14 பரப்பு காணி (தென்னை, மா, பனைகளுடன்) உடன் விற்பனைக்கு.
(A/005)

**யாழ்ப்பாணம்** (காணி விற்பனைக்கு)
யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் 1 பரப்பு 7 குளி காணி உடன் விற்பனைக்கு.
(A/006)

**கோப்பாய்** (காணி/ வீடு விற்பனைக்கு)
கோப்பாய் வைத்தியசாலைக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு 2 பரப்பு 16.5 குழி காணியுடன் (தென்னை, மா, பலா, தோடை என பயன் தரு மரங்களுடன்) உடன் விற்பனைக்கு உண்டு.
(A/007)

**திருநெல்வேலி** (காணி/ வீடு விற்பனைக்கு)
திருநெல்வேலி மருத்துவ பீடத்திற்கு அண்மையில் 7 பரப்பு காணியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு (40 தென்னை, மா பயன் தரு மரங்களுடன்) உடன் விற்பனைக்கு உண்டு
(A/008)

**றியல் எஸ்ரேற்** இல. 50, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
(பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்திக்கும் நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கும் இடையில்) எனும் முகவரியில்

**TP.No: 021 567 1543**


**பதிவுக் கட்டணம் ரூபா 1000 /-**

அலுவலக நேரம் 8.30 - 12.30,
1.30 - 5.00 மணிவரை
வெள்ளிக்கிழமை விடுமுறை.

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
021 321 0815 ,
021 567 1532




# வடபுலத்து உடன் பிறப்புகளே,
## "உரிமைகளுக்கு குரல் கொடுப்போம், உறவுக்கு கை கொடுப்போம்"







(யாழிலும் , கிளிநொச்சியிலும் கடந்த வடமாகாண சபைத்தேர்தலின் போது தலைவர் மனோ கணேசனும் , சண்.குகவரதனும் , தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து தேர்தல் பிரசார மேடையில் பேசியபோது..)




" வாக்குரிமையுள்ள ஒவ்வொருவரும் தேர்தலன்று வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களியுங்கள்" என தமது மேல்மாகாண உறவுகளை வலியுறுத்தும்படி அனைத்து வடபுலத்து உடன்பிறப்புகளையும் நாம் வேண்டுகிறோம்.

தேர்தல் பரப்புரைக் குழு
ஜனநாயக மக்கள் முன்னணி

# யாழ் மண்ணின் மைந்தன்
# சண். குகவரதன்
(பொறியியலாளர்)

## அண்ணன் மனோவுடன் மேல்மாகாண சபைத் தேர்தலில்..

(5864)



தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் பூட்டன்,
(கோப்பாய் கிறிஸ்தவக் கல்லாரியின் பழைய மாணவன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நன்னயம்...!

நம்மிடம் ஒருவன் பிழையாக நடந்து கொண்டால், உடனே நாம் என்ன செய்வோம்?

கையை ஓங்கிக் கொண்டு, அவனை அடிக்கப் போவோம். நாமும் அவனிடம் ஒருபடி மேலாகப் பிழையாக நடந்து கொள்வோம்.

ஆனால், பண்பாடு தெரிந்தவர்கள் அப்படி நடந்து கொள்வதில்லை.

“இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்” என்று வள்ளுவர் கூறியுள்ளார். அதற்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்வார்கள்.

பாயஸீத் பிஸ்தாமிங் என்பவர் ஒரு பெரிய ஞானி. அவர் ஒருநாள் இரவு நீண்ட நேரம் பள்ளிவாசலிலே இருந்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

வழியிலே ஒரு குடிகாரன். அவன் கையிலே ஒரு இசைக் கருவி. அதை அவன் கன்னா பின்னாவென்று மீட்டுக் கொண்டு வாய்க்கு வந்த மாதிரி எதையோ பாடிக் கொண்டு நடந்து சென்று கொண்டிருந்தான்.

பாட்டுப்பாடியதோடு நிறுத்தவில்லை. தெருவில் சென்று கொண்டிருந்தவர்களையும் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தான்.

பாயஸீத் அவனைப் பார்த்து பரிதாபப்பட்டு; “ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறாய்” என்று கேட்டு விட்டு புத்திமதி கூற ஆரம்பித்தார்.

அவனுக்கு கோபம் வந்து விட்டது. கையிலே வைத்திருந்த அந்த இசைக்கருவியால் பாயஸீத்தின் தலையில் ஓங்கி அடித்தான்.

இரத்தம் ஆறாகப் பெருக்கெடுத்தது. அத்தோடு அவனது இசைக்கருவியும் இரண்டாக உடைந்து விட்டது.

இவ்வளவு நடந்தும்கூட அந்தப் பெரியவர் வாயைத் திறந்து ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அமைதியாகத் தலையைப் பொத்தியபடி போய் விட்டார்.

மறுநாள் காலையில் அந்தப் பெரியவர் ஒரு பையினுள் இனிப்புப் பண்டங்கள், ஒரு தொகை பணம் ஆகிய இரண்டையும் ஒரு நபர் மூலம் குடிகாரனுக்கு அனுப்பி வைத்தார்.

குடிகாரனுக்கோ ஒன்றுமே புரியவில்லை. என்ன விபரம் என்று விசாரித்தான். வந்த நபர் கடதாசியை நீட்டினார். அதிலே விபரம் எழுதியிருந்தது.

“உங்களுடைய இசைக் கருவி உடைவதற்கு என்னுடைய தலைதான் காரணம். அதற்காக நான் மிகவும் மனவேதனை அடைகிறேன். பணம் அனுப்பியுள்ளேன். புதிய இசைக்கருவி ஒன்றை வாங்கிக் கொள்ளுங்கள்.

அதன்பின் இன்னொரு விடயம். நேற்றிரவு என்னிடம் அதிகளவான கசப்பான வார்த்தைகளை நீங்கள் பேசியதாக நினைக்கிறேன். இத்துடன் அனுப்பியுள்ள இனிப்புப் பண்ட ங்கள் உங்கள் நாவில் உள்ள கசப்பை மாற்றியமைக்கும்” என்று அக்கடிதத்தில் எழுதியிருந்தது.

இப்போது அவன் குடி மயக்கத்திலே இல்லை. தெளிவடைந்து இருந்தான். இதைப் படித்தவுடனேயே அவன் வெட்கிப் போய் தலையைக் குனிந்தான். சற்று நேரம் யோசனை செய்தான்.

உடனே தனது நண்பர்களை அழைத்து அந்த ஞானி இருக்கும் இடத்திற்குச் சென்றான்.

அவரிடம் சென்று மன்னிப்புக் கேட்டான்.

“பெரியவரே! தெரியாமல் நான் இந்தப் பாவத்தைச் செய்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். உங்களுடைய பொறுமையும் போதனையும் என்னுடைய கண்களைத் திறந்து விட்டன. இனிமேல் நானும் திருந்தி வாழ்வதற்கு உங்களது போதனை வழி சமைத்துள்ளது” என்று கூறினான்.

ஞானி செய்த “நன்னயம்” குடிகாரனை எப்படித் திருத்தியிருக்கிறது பார்த்தீர்களா?...

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பயிலுநர்களுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் சுகாதார அமைச்சிலுள்ள 14 வெற்றிடங்களுக்கான பயிலுநர்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக யாழ். பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி. சிவராணி அறிவித்துள்ளார்.

இதன்படி மாணவ தாதியர் பயிலுநர்கள் இதற்கான மேலதிக விபரங்களிற்கு நேற்றைய தின வர்த்தமானியையும் குடும்ப நல சேவை உத்தியோகத்தர் பயிலுநர்கள் மேலதிக விடயங்களிற்கு கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வர்த்தமானிப் பத்திரிகையையும் பார்வையிடலாம்.

அத்தோடு மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர் பயிலுநர்கள், மருந்தாளர் பயிலுநர், உடற்கூற்று சிகிச்சையாளர் பயிலுநர்கள், தொழில்சார் சிகிச்சையாளர் பயிலுநர்கள், பரிசோதனை பகுப்பாளர் பயிலுநர்கள், பொது சுகாதார பரிசோதகர் பயிலுநர்கள், ஆய்வு வரைபாளர் பயிலுநர்கள், பொது சுகாதார பரிசோதகர் பயிலுநர்கள், ஆய்வு வரைபாளர் பயிலுநர், இலத்திரனியல் ஆய்வு வரைபாளர் பயிலுநர், பார்வை தொழில் நுட்பவியலாளர் பயிலுநர்கள், பல் தொழில் நுட்பவியலாளர் பயிலுநர்கள், கிருமி விஞ்ஞான உதவியாளர் பயிலுநர்கள், பாடசாலை பல் சிகிச்சையாளர் பயிலுநர்கள் ஆகியவற்றிற்கு எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரமாகவுள்ள வர்த்தமானியைப் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-9)

# சடலத்தைப் பொறுப்பேற்குமாறு உறவினர்களுக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தவரின் சடலத்தை உறவினர்கள் உரிமை கோருமாறு வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.பவானந்தராஜா கோரியுள்ளார்.

ஆனைக்கோட்டை உயரப்புலத்தினைச் சேர்ந்த எஸ். இலங்கநாதன் (வயது 67) என்பவர் விடுதி இலக்கம் 08 இல் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 18 ஆம் திகதி முற்பகல் 11.45 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் உறவினர்கள் யாரும் வைத்தியசாலைக்கு வருகைதராத காரணத்தினால் உடனடியாக உறவினர்களை வைத்தியசாலைக்கு வருகை தந்து சடலத்தை பொறுப்பேற்குமாறு பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (2-4)

# நோயாளியின் உறவினர்கள் சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளியின் உறவினர்களை வைத்தியசாலைக்கு வருகைதருமாறு வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா அறிவித்துள்ளார்.

கடந்த 8 ஆம் திகதியன்று பிற்பகல் 6.45 மணியளவில் வீதியோரத்தில் காணப்பட்ட கே.தர்மராஜா (வயது 62) என்பவரை வீதியால் சென்ற ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் விடுதி 24 இல் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை இவரது உறவினர்கள் யாரும் சமுகமளிக்காத காரணத்தினால் அவர்களினை உடனடியாக வைத்திய சாலைக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (2-4)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 80 |
| தக்காளி | 30 | 30 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 35 | 40 |
| கரட் | 80 | 80 | 100 |
| பூசணி | 30 | 35 | 40 |
| புடோல் | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-80 | 60 | 80 |
| பெரிய வெங்காயம் | 50-70 | 70 | 60 |
| பாகற்காய் | 100 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 40 |
| பயற்றங்காய் | 50 | 90 | 60 |
| லீக்ஸ் | 50 | 80 | 80 |
| பீற்றூட் | 20 | 25 | 40 |
| கறிமிளகாய் | 70 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 300 | – | 240 |
| போஞ்சி | 90 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | – |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 30 |
| தேசிக்காய் | 40 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 30 | 40-45 |
| இராசவள்ளி | 70 | – | 80 |

# இராசி பலன்

22.03.2014
(பங்குனி 08 , சனிக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 8.12 மணிவரை
அனுசம் பிற்பகல் 2.40 மணிவரை
இராகுகாலம் 9.17-10.47 மணிவரை
சுபநேரம் 3.17-4.47 மணிவரை

**மேடம்** உடல்நலனில் கவனம் தேவை, பயணங்களின் போது கவனம் தேவை, தேவையற்ற விவாதங்கள் ஏற்படலாம், முயற்சியில் சில தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**இடபம்** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** உற்சாகமாகக் பணிபுரியும் நாள், வியாபார விருத்தியுண்டு, வருமானம் வரும் வழியை கண்டுகொள்வீர்கள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**கடகம்** தன்னம்பிகை துளிர்விடும் நாள், பிரபலமானவர்கள் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பயந்த சுபாவமுண்டு, சுபசெலவுகள் கூடும்.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், எப்படி நடக்குமோ என நினைத்த காரியமொன்று நல்ல படியாக நடைபெறலாம், உடன் பிறப்புகள் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**துலாம்** புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், வீடு கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம்.

**விருச்சிகம்** உறவினர் பகை அகலும், தொலைபேசி வழியில் அனுகூலமான தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, எண்ணங்கள் எளிதில் கைகூடும்.

**தனுசு** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், பெரிய மனிதர்களின் ஆலோசனைகளைக் கேட்பீர்கள்.

**மகரம்** பயணங்கள் கைகூடும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வருமானம் திருப்தி தரும், பொது வாழ்வில் புகழ் கூடும், போசன நன்மையுண்டு.

**கும்பம்** அருமையான நாள், அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வரலாம், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம்.

**மீனம்** தடைகள் விலகி தனவரவுகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு, புதிய திட்டங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுவார்த்தையை திசைதிருப்ப மீனவர்கள் கைது அரங்கேறியுள்ளது

## கருணாநிதி கண்டனம்



**(சென்னை) இந்திய -இலங்கை மீனவர்களிடையே எதிர்வரும் 25 ஆம் திகதி பேச்சுவார்த்தை நடைபெற இருந்தது. இதை திசை திருப்பி குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலான நிகழ்வை இலங்கை அரசு அரங்கேற்றியுள்ளதாக தி.மு.க.தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.**

அத்துடன் இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை யில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

இராமேஸ்வரம் மண்டபம் பகுதிகளில் இருந்து 400-க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றபோது, இலங்கைக் கடற்படையினர் சுற்றி வளைத்து, முதலில் அங்கிருந்து சென்றுவிடுமாறு எச்சரித்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து கடலில் வீசப்பட்ட வலைகள் மற்றும் மீன்களுடன் புறப்படத் தயாரானபோது, ரோந்து கப்பல்களில் இருந்து இலங்கை கடற்படையினர் திடீரென்று தமிழக மீனவர்களின் படகுகளில் இறங்கி, படகுகளில் இருந்த வலைகளை அறுத்தெறிந்துள்ளனர். 5 படகுகளைச் சிறைபிடித்துள்ளனர். அவற்றில் இருந்த 25 மீனவர்களையும் சிறைபிடித்துச் சென்றுள்ளனர்.

மேலும் புதுக்கோட்டை, காரைக்கால் மீனவர்களும் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இந்தப் பகுதிகளில் 12 படகுகளுடன் 75 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வுகள் இலங்கை அரசின் ஒப்புதலின்றி நடந்திருக்க முடியாது. உண்மையில் இலங்கை அரசு இந்தப் பிரச்சினையில் ஒரு தீர்வு ஏற்பட வேண்டுமென்று கருது மேயானால், இப்படிப்பட்ட செயல்களில் தொடர்ந்து ஈடுபடுவதில் அர்த்தமே இல்லை.

எனவே இந்திய அரசையும், தமிழக மீனவர்களையும் ஏமாற்றும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபடுகிறதோ என்ற சந்தேகம்தான் ஏற்படுகிறது.

பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இப்படிப்பட்ட செயல்களில் இலங்கைக் கடற்படை ஈடுபடுவதும், அது தொடர்பாக இந்திய அரசு எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்காமல் இருப்பதும் மிகுந்த கண்டனத்துக்கு உரியதாகும் என்று கருணாநிதி கூறியுள்ளார். (2)

## மோதலில் ஈடுபட்ட பத்து மாணவர்கள் படுகாயம்

கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதலில் 10 பேர் படு காயமடைந்து செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

தமிழ் மாணவர்களுக்கும் சிங்கள மாணவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதாக கிழக்கு பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்லைக்கழகத்தில் ஒரு மாதத்திற்கு முன்னர் இடம்பெற்ற கூடைப்பந்தாட்ட நிகழ்வொன்றில் மாணவக்குழுக்களுக் கிடையில் ஏற்பட்டிருந்த முறுகல் நிலை மீண்டும் இவ்வாறு கைகலப்பாக மாறியதாகக் கூறப்படுகிறது.

பல்கலைக்கழக முதலாம் ஆண்டு கலைப் பிரிவின் தமிழ் மாணவர்கள் த்ங்கும் விடுதிக்குள் புகுந்த 4 ஆம் ஆண்டு சிங்கள மாணவர்கள் தடாலடியாக இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாகவும் கூறப்படுகின்றது.

தாக்குதலுக்கு பேனாக் கத்தி மற்றும் மின். அழுத்தி என்பனவும் பாவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக ஏறாவூர் பொலிஸாரும் அதேவேளை கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகமும் தனித் தனியாக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றன. (2)


**இலங்கை தரைப்படை தொண்டர் படையணிக்கு புதிதாக ஆண்,பெண் சிப்பாய்கள்**

**தொழில் வாய்ப்புக்காக இணைத்துக் கொள்ளல்**

சேர்த்துக் கொள்ளுவதற்கான அடிப்படைத் தகைமைகள்.

- இலங்கையில் பிறந்தவராக இருத்தல் வேண்டும்.
- புதிய சிப்பாய்கள் ஆண் வயது 18-26 க்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- புதிய சிப்பாய்கள் பெண் வயது 18-24க்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- 08 வகுப்பு சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

தேவைப்படும் மூலப் பிரதிகள்.

- தேசிய அடையாள அட்டை.
- பிறப்புச் சான்றிதழ்.
- பாடசாலை விடுகைப் பத்திரம்.
- கிராம சேவையாளர் சான்றிதழ்.
- நன்னடத்தைச் சான்றிதழ். 02
- பொலிஸ் சான்றிதழ்.
- தொழிலுக்குரிய தகைமைகள்.

புதிய சிப்பாய் ஆண்/பெண்களுக்கான நலன்புரி வசதிகள்.

- இலவச உணவு மற்றும் தங்குமிட வசதிகள்.
- இலவச சீருடை.
- ஆண். பெண் சிப்பாய்களின்.தாய்/தந்தை/மனைவி/கணவன்/பிள்ளைகளுக்கு மருத்துவம் மற்றும் போக்கு வரத்து வசதிகள்.
- நலன்புரி காப்புறுதி திட்டத்தின் கீழ் பெற்றோர்/மனைவி/கணவன்/பிள்ளைகளுக்கு ஆயுள் காப்புறுதி.
- உள்நாட்டு வெளிநாட்டுப் பயிற்சிகள்.
- புதிய ஆண்/பெண் சிப்பாய்களின் மாதாந்த கொடுப்பனவுகள் ரூபாய் 26280.00க்கு மேல்.

**சேர்த்துக் கொள்ளல். 2014.03.19 ஆம் திகதி முதல் யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து இராணுவ முகாம்களிலும் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடைபெறும்.**

விபரங்கள் 0212222112

(587)



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>கி.பா: 26<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L / மேற்பார்வையாளர் (டோகா)<br>தொ.இ: B/2946 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்கி.<br>பா: 16.5 செவ் 12 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: கலைப்பட்டதாரி /ஆசிரியர்<br>தொ.இ: G/2957 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: 34 ¼ செவ் 7 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L / கணனி தட்டச்சாளர்<br>தொ.இ: B/2947 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: 23.75 செவ் 4 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L /தையல்<br>தொ.இ: G/2958 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 26.5<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L /வியாபாரம்<br>தொ.இ: B/2948 | பிறப்பு: 1974 கிறீஸ்தவம்<br>நட்சத்திரம்: உத்தரம்<br>உயரம்: 151 cm<br>தகைமை/தொழில்: BSMS, MSc / ஆயுள்வேத வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: பெண் கணவனை இழந்தவர்<br>தொ.இ: G/2961 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 19.75<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: BIT /அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/2949 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: 24.75 செவ் 4 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA / அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: G/2967 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சா விற்பனை செய்த நபருக்கு தடுப்பு காவல்-இருவர் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஓட்டுமடம் பகுதியில் கஞ்சா விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 3 நபர்களில் இருவரைப் பொலிஸ் பிணையில் விடுதலை செய்ததுடன் மற்றைய ஒருவரை யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் பெ.சிவகுமாரின் அனுமதியுடன் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருவதாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஹான் டயஸின் கீழான புலனாய்வு பிரிவினரால் ஓட்டுமடத்தில் வைத்து கஞ்சா விற்பனை செய்த குற்றச்சாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மூவர் கைது செய்யப்பட்டதோடு அவர்களிடமிருந்து 5 கிலோ கிராம் கேரளாக் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட மூவரும் யாழ். பொலிஸ் நிலைய சட்டவிரோத குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் கடந்த புதன்கிழமை ஒப்படைக்கப்பட்ட போது மூவரில் இருவரை பொலிஸ்பிணையில் விடுதலை செய்ததுடன் மற்றைய ஒருவர் யாழ். நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போது குறித்த நபரை பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கும்படி நீதவானிடம் பொலிஸார் அனுமதி கோரியிருந்தனர்.

இதற்கு நீதவான் அனுமதியளித்ததனைத் தொடர்ந்து குறித்த நபரை தொடர்ந்தும் பொலிஸ் தப்புக் காவலில்வைத்து விசாரணைமேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (2-4)




நன்றி: அததெரண

# இலங்கை-இந்திய மீனவர்களுக்கு ஆதரவு வழங்கி உண்ணாவிரதப் போராட்டம்

## போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கம் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை- இந்திய மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தக்கோரி எதிர்வரும் 31 ஆம் திகதி யாழ். இந்திய துணைத்தூதரகம் முன்பாக சாகும் வரையான உண்ணாவிரதப்போராட்டம் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் அனைத்து நாட்டுப் படகு மற்றும் சங்கங்களின் ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவர் ஜி.அருளிற்கு போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் தலைவர் வி.சகாதேவன் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எமது ஈழத்தமிழ் மீனவர்களின் சார்பாக தங்களது தொடர் போராட்டத்திற்கு முழுப்பங்களிப்பையும் வழங்கி போராட்டம் வெற்றி பெற்று எம் இருநாட்டு மீனவர்களின் வாழ்வு சிறக்க எனது உயிரையும் அர்ப்பணிக்க நான் தயாராக இருக்கிறேன்.

தங்களது போராட்டம் வெற்றி பெறுவதற்கு ஈழத்தமிழ் மீனவர் சமூகத்தின் முழுமையான ஆதரவைப் பெற்றுத்தரவேண்டிய தார்மீகப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். இனி எம் காலங்களில் இப்போராட்டம் தொடர்பாக எமது நிலைப்பாடு தங்களது 18.03.2014ஆம் திகதிய தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டே அமையும்.

தங்களது நிலைப்பாட்டிற்கு எமது மீனவர் சமூகத்திலிருந்து பெரும் ஆதரவு ஏற்பட்டுள்ளதையும் இனிவரும் காலங்களில் இவ்வாதரவுத்தளம் ஒரு போராட்ட சக்தியாக வலுப்பெறும் என்றும் உறுதியாக நம்புகிறேன்.

எமது போராட்டங்களை பின்வரும் கட்டங்களில் வழிநடத்துவதற்கு எமது தாழ்மையான ஆலோசனைகளையும் தங்களுக்கு தெரியப்படுத்துகிறேன்.

சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தீர்மானங்களை தமிழகத்திலுள்ள சகல கடற்கரையோர மாவட்ட மீனவ அமைப்புக்களிலும் ஆதரவு தீர்மானம் நிறைவேற்றுதல்.

எமது போராட்டத்திற்கு ஆதரவாக சக்திகளை இனங்கண்டு எமது போராட்ட நியாயத்தன்மை நோக்கம் என்பவற்றை தெளிவுபடுத்துதல்.

எனது சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்திற்குஆதரவானஅடையாளஉண்ணாவிரத போராட்டத்தை நாளை மறுதினம் (24.03.2014) அன்று தமிழகத்தில் சகல கடற்கரையோர ஆட்சியர் அலுவலகம் முன்பும் நடத்தி எடுக்கவேண்டிய நடவடிக்கை தொடர்பான உறுதியான தீர்மான நகலை சகல மாவட்ட ஆட்சியருக்கும் வழங்கி கோரிக்கை நிறைவேற்றப்படாது போனால் எதிர்வரும் 31.03.2014ஆம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகம் முன்பாக சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்பதனை பிரகடனம் செய்தல்.

25.03.2014அன்று கொழும்பில் நடைபெறும் இருநாட்டு மீனவர் பிரதிநிதிகள் சந்திப்பில் நடைபெறும் விடயங்களை அவதானித்தல்.

எமது போராட்டங்கள் புறந்தள்ளும் விதமாக இருநாட்டு அரசகளும் நடந்து கொண்டால் 31.03.2014 அன்று யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதரகம் முன்பாக எனது தலைமையில் சாகும்வரையான உண்ணாவிரதப்போராட்டம் தொடங்கப்படும்.

இவ்வுண்ணாவிரதப்போராட்டம் நடந்து கொண்டிருக்கும்போது எவ்விதமான வாக்குறுதிகளையும் நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

எனவே தாங்கள் இப்போராட்டத்தை வலுப்பெறச் செய்வதற்காக ஆதரவான உணர்வுகளையும் தீர்வினைப் பெற்றுத்தரும் நகர்வுகளையும் ஆதரவான போராட்டங்களையும் தமிழகத்தில் நிகழ்த்த வேண்டும். தங்களது கோரிக்கைகளை அவ்வேளையில் இருநாட்டு அரசுகளும் ஏற்றுக் கொண்டால் மட்டுமே எனது போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)




## தொழில்நுட்ப மாற்றீட்டு பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சினால் தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சி நெறிகள் கோப்பாய் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் இலவசமாக நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ளோர் தமது சுயவிபரக் கோவை, சான்றிதழ்கள் மற்றும் பங்கீட்டு அட்டையுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாகவோ விதாதா வள நிலையத்திற்கு நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கோப்பாய் வடக்கு மார்க்கம்பரை வீதியில் அமைந்துள்ள சரவணபவானந்த பாடசாலை அருகாமையிலுள்ள எமது நிலையத்தில் பதிவினை மேற்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 0212230007 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ள முடியுமென வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் எம். பிரதீபன் தெரிவித்துள்ளார். (2-4)




வடமாகாண ஆளுநர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் மும்மொழிக் கற்கை நிலையம் நேற்று காலை திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி நாடாவெட்டி அலுவலகத்தை திறந்து வைப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பூநகரி பொது வைத்தியசாலை கட்டட வேலைகள் பூர்த்தி

## திறக்கப்படாமை குறித்து மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்



(பூநகரி)

பூநகரி பொது வைத்தியசாலைக் கான கட்டட வேலைகள் அனைத்தும் பூர்த்தியடைந்து ஆறு மாதங்கள் கடந்துள்ள நிலையில் மக்கள் பாவனைக்கு விடப்படவில்லையென மக்கள் தெரிவித்துள்ளனர். யுத்தத்திற்கு பின்னர் இப்பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேற்றப்படுவதையடுத்து பூநகரி வைத்தியசாலை தனியாருக்கு சொந்தமான வீடொன்றிலேயே இயங்கி வருகின்றது.

இந்நிலையில் மூன்று வருடங்களுக்கு மேலாக பூநகரி வாடியடியிலுள்ள தனியார் வீடொன்றில் வைத்தியசாலை இயங்கி வருகின்ற போதிலும் அவ்வீட்டிற்கான எவ்வித வாடகைப் பணமும் வீட்டின் உரிமையாளர்களுக்கு வழங்கப்படவில்லை.

உரிமையாளர்கள்தமதுவீட்டினைத் தருமாறும் வைத்தியசாலையை அதற்கென அமைக்கப்பட்டுள்ள கட்டடத்திற்கு கொண்டு செல்லுமாறும் தெரிவித்துள்ளனர்.

பூநகரி பிரதேச மக்கள் அடிப்படை வசதிகள் பலவற்றில் பின்தங்கி வாழ்கின்ற சூழலால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு மூடி வைக்கப்பட்டுள்ள பூநகரி வைத்தியசாலையை மக்கள் பாவனைக்கு விடப்படாதது ஏன் என மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

அத்தோடு தற்காலிகமாக இயங்கி வரும் வைத்திய சாலையில் நோயாளர் விடுதிகள், வெளிநோயாளர் பகுதிகள் என்பன இல்லாமையினால் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆகவே, நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்துள்ள பூநகரி வைத்தியசாலையை மக்களின் பாவனைக்காக விடுமாறும், தனியாருக்கு சொந்தமான வீட்டினை அவரிடம் ஒப்படைக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-9-84)

# புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு இடையூறு

## சமூகமயப்படுத்தப்பட்ட பின்னரும் அச்சுறுத்தல் தொடர்வதாக கூறுகின்றனர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட முன்னாள் போராளிகள் தொடர்ந்து இடையூறுகளை சந்தித்து வருவதாக பாதிக்கப்பட்டவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

யுத்தத்தின் போது இராணுவத்தில் சரணடைந்தவர்களும் பின்னர் அழைத்துச் செல்லப்பட்ட முன்னாள் போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் சமூகமயப்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் புதுக்குடியிருப்பிலும் பல நூற்றுக்கணக்கானவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பான சில தகவல்களைப் பெற்றுக் கொண்டு தம்மை குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் எனவும் இராணுவத்தினர் எனவும் அடையாளங் காட்டி அவர்களின் வீடுகளுக்கு செல்கின்றனர்.

இச்சம்பவங்கள் கேவில், கைவேலி ஆகிய இடங்களில் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு தம்மை அடையாளப்படுத்தி புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் வீடுகளுக்கு சென்று விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தில் எப்பிரிவில் வேலை செய்ததாகவும் நிதிப் பிரிவில் வேலை செய்திருந்தால் இறுதிக்கட்டப்போரின் போது பணம், நகை போன்றவற்றை எங்கு புதைத்ததாகவும் கேள்வி கேட்டு அவர்களுக்கு இடையூறு விளைவிக்கின்றனர்.

அத்தோடு, புதைக்கப்பட்டுள்ள பணம், நகை என்பவற்றை தம்மிடம் ஒப்படைக்குமாறும் அதன் பின்னர் நீங்கள் எவ்வித பயமுமின்றி வாழலாம் எனவும் அவர்களால் கூறப்பட்டுள்ளது. இதனால், முன்னாள் போராளிகள் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் மீண்டும் மீண்டும் தமக்கு இடையூறுகளை கொடுப்பதையிட்டு அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, இவ்விடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் மற்றும் கிளிநொச்சி, மாங்குளம், முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் யூகே திஸ்ஸநாயக்க ஆகியோர் கவனமெடுத்து முன்னாள் போராளிகளை இடையூறின்றி வாழ நடவடிக்கை எடுக்க வேண்டும் என சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-9-267)

# கொக்கிளாய் ஆற்றில் தடை செய்யப்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடி

## விடுவலைகள் படகுகளில் அகப்பட்டு சேதமடைவதாக கடற்றொழிலாளர்கள் கவலை

(முல்லைத்தீவு)

கொக்கிளாய் ஆற்றில் தொடர்ந்தும் சட்டவிரோத உபகரணங்களைப் பயன்படுத்தி சிங்கள மீனவர்கள் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பிரதேச கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கொக்கிளாய் ஆற்றில் தடைசெய்யப்பட்ட வலைகளையும் உபகரணங்களையும் பயன்படுத்தி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாமென இவ் வருட ஆரம்பத்திலேயே முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.




அத்தோடு கொக்கிளாய் ஆற்றில் எவ்வாறான வலைகளைப் பயன்படுத்த வேண்டுமென அளவுகளோடு கடிதமொன்று அனைத்து கிராம மட்ட மீனவ சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு இவ்வாற்றில் தொழிலை மேற்கொள்பவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொக்குத் தொடுவாய் வடக்கு, தெற்கு, மத்தி, கொக்கிளாய் கிழக்கு, மேற்கு, கருநாட்டுக்கேணி ஆகிய ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 450 இற்கும் மேற்பட்ட தமிழ் மீனவ குடும்பங்கள் சட்டத்திற்கேற்ப வகையில் கொக்கிளாய் ஆற்றில் தொழிலை மேற்கொண்டு வருகின்றன.

ஆனால், கொக்கிளாய் முகத்துவாரத்தில் தமிழ் மக்களின் உறுதிக் காணிகளில் குடியேறியுள்ள 262 இற்கு மேற்பட்ட தென்னிலங்கை சிங்கள மீனவர்கள் தடைசெய்யப்பட்டுள்ள இயந்திரம் இணைக்கப்பட்ட படகுகளைக் கொண்டு ஆற்றில் தொழில் செய்து வருகின்றனர்.





இதனால், கடந்த இருநாட்களாக தமிழ் மீனவர்களின் விடுவலைகள் படகுகளில் அகப்பட்டு சேதமடைந்துள்ளன.

இதனால், தமிழ் மீனவர்களின் தொழிலும் வலைகளும் பாதிப்படைவதாக அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவிக்கையில்,

நாம் சட்டத்தை மதித்து தொழிலில் ஈடுபட்டு வருகின்றோம். எமது பூர்வீக கடல் வளங்களை வெளி மாவட்டத்திலிருந்து வந்த மீனவர்கள் சட்டத்துக்கு முரணான வகையில் தொழில் செய்து சூறையாடி வருகின்றனர்.

ஆரம்பத்தில் புல்மோட்டை மீனவர்களால் பாதிக்கப்பட்ட நாம், தற்போது கொக்கிளாய் முகத்துவாரத்திலுள்ள சிங்கள மீனவர்களால் பாதிப்படைகின்றோம்.

இவ்வாறாக தொழில் சுரண்டல்கள் நீடிக்குமானால் இரு இனங்களுக்கிடையே பிரச்சினை மூண்டு குடியேறியுள்ள சிங்கள மீனவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்ப வேண்டிய நிலைமை தோன்றும்.

தற்போது கொக்கிளாய் முகத்துவார மீனவர்களின் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளைப் பார்த்து புல்மோட்டையிலுள்ள சில மீனவர்களும் தடைசெய்யப்பட்ட தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆகவே, இது தொடர்பில் முல்லை மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினரும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-9-267)

# பயணிகளை ஏற்றிக்கொண்டு எரிபொருள் நிரப்பும் பேருந்துகள்

## சட்டத்திற்கு மாறான செயல்-மக்கள் சுட்டிக்காட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் போக்குவரத்தில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பேருந்துகள் பயணிகளை ஏற்றிக் கொண்டு எரிபொருள் நிரப்புவதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பேருந்துகளில் பயணிகளை ஏற்றிக்கொண்டு எரிபொருள் நிரப்பக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும், அவற்றை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அரச தனியார் பேருந்துகள் கவனத்தில் கொள்வதில்லை.

இதனால், பயணிகளின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதோடு, அச்சநிலையும் தோன்றியுள்ளது.

எனவே, சட்டவிதி முறைகளுக்கேற்ப அரச மற்றும் தனியார் பேருந்துகளின் நடவடிக்கைகளை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினரும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அரச மற்றும் தனியரார் பேருந்து உரிமையாளர் சங்கங்களும் கவனத்திலெடுக்க வேண்டுமென பயணிகள் வலியுறுத்தியுள்ளனர். (2-9-267)

# மாணவர்கள் சங்க கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

(குருமன்காடு)

வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கக்கூட்டமும் புதிய நிர்வாகத் தேர்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற பகல் 4 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற விருப்பதாக கல்லூரியின் அதிபர் உமா இராசையா தெரிவித்தார்.

பாடசாலையின் வளர்ச்சி மற்றும் எதிர்கால செயற்பாடுகள், கட்டமைப்புக்கள் தொடர்பான விரிவான கலந்துரையாடலும் இவ்வாண்டிற்குரிய பழையமாணவர் சங்க நிர்வாகத் தெரிவும் நடைபெற விருப்பதாகவும் குறித்த கூட்டத் திற்கு சைவப் பிரகாசா கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-9-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# சிறுவர் அரங்கம்

755

## நெய் டப்பாவில் பொற்காசு

...உடனே பேச்சை மாற்றிய பீர்பால், "அஸ்லாம்! உங்களால் எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா?" என்றார்.

"சொல்லுங்கள்" என்று அஸ்லாம் கூற, "கிராமத்திலுள்ள என் நண்பனிடம் எனக்கு ஒரு டின் நெய் அனுப்பச் சொன்னேன். அவன இரண்டு டின் அனுப்பி விட்டான். ஒரு டின் நெய்யை எங்காவது விற்றுவிட்டால் நல்லது" என்றார் பீர்பால்.


"அதை என்னிடம் கொடுங்கள். அதை விற்றுப் பணத்தை உங்களுக்கு அனுப்புகிறேன்" என்றான் அஸ்லாம்.

மதுசூதன் மூச்சிரைக்க ஓடிவந்தார். "பீர்பால்! நீங்கள் அனுப்பியிருந்த டின்னில் ஒரு பொற்காசு இருந்தது. அதைக் கொடுக்க வந்தேன். நெய் விற்ற பணம் இதோ!" என்று அவர் மொத்தத்தையும் பீர்பாலிடம் தந்தார்.

'அட! நான் அனுப்பிய டின்னில் பொற்காசு இருந்ததா? நான் மிகவும் அதிர்ஷ்டசாலி! நன்றி, மதுசூதன்" என்றார் பீர்பால்.

ரகசியமாக ஏதோ கூறினார். அவர் என்ன கூறினார் என்று அஸ்லாமின் செவிகளில் விழவில்லை. அதைப்பற்றி அவன் பொருட்படுத்தவும் இல்லை.

பீர்பால் தன் வேலைக்காரனிடம் ரகசியமாகக் கூறியது இதுதான்! "நேராக நீ அஸ்லாமின் வீட்டுக்குப் போ! அவருடைய மகனைக் கூப்பிடு! அவனுடைய தந்தை பீர்பாலின்





"நன்றி! நாளைக்கே உங்கள் கடைக்கு ஒரு டின் அனுப்பி வைக்கிறேன்" என்று சொல்லிவிட்டு பீர்பால் அவரை அனுப்பி வைததார். மறுநாள், மதுசூதன் வீட்டுக்குச் சென்ற பீர்பால், அஸ்லாம்கானிடம் கூறியதுபோல் கூறிவிட்டு நெய்யை விற்றுத்தர முடியுமா என்று கேட்டார். மதுசூதனும் அதற்கு ஒப்புக் கொண்டதும், இரண்டு பேர் கடைக்கும் இரண்டு நெய் டின்கள் அனுப்பப்பட்டன.

மறுநாள் பீர்பால் தன் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கையில்,

"அது இருக்கட்டும். என்னுடைய வழக்கு என்ன ஆயிற்று?" என்று மதுசூதன் கேட்க, "அதுவா! நான் விசாரணை நடத்திக்கொண்டு இருக்கிறேன். நாளைக்கு முடிவு தெரியும்" என்றார் பீர்பால்.

அடுத்த நாள் பீர்பால் வீட்டுக்கு வந்த அஸ்லாம் "உங்களுடைய நெய் விற்ற பணம் இதோ!" என்று பணத்தை அளித்தார். அவருக்கு நன்றி தெரிவித்தபின் அவரை உட்காரச் சொல்லிவிட்டு பீர்பால் தன் வேலைக காரனை அழைத்து அவன் செவிகளில்

வீட்டிலிருப்பதாக கூறு! பிறகு நெய் டின்னில் இருந்த ஒரு பொற்காசை எடுத்துவர மறந்து விட்டதாகவும், அதை உடனடியாக எடுத்து வரவும் அவன் தந்தை கூறியதாகச் சொல்!" என்றார்.

வேலைக்காரனை அஸ்லாமின் வீட்டுக்கு ரகசியமாக அனுப்பியபின், பீர்பால் தன் வரவேற்பறையில் அமர்ந்திருந்த அஸ்லாமிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டு வேண்டும் என்றே காலத்தைக் கடத்தினார்.

சற்று நேரத்தில் அஸ்லாமின் மகனுடன் பீர்பாலின் வேலைக்காரன் திரும்பினான். அந்தச் சிறுவன் அஸ்லாமை நோக்கி ஓடி வந்து, "அப்பா! நீங்கள் எடுத்துவரச் சொன்ன பொற்காசு இதோ! இது நமக்கு நேற்று நெய் டின்னில் கிடைத்தது" என்று உண்மையை உளறிவிட, அஸ்லாம் கோபத்துடன் "அதிகப் பிரசங்கி! உன்னை யார் இங்கே வரச்சொனனது? நெய் டின்னில் பொற்காசா? நீ என்ன மடத்தனமாய் உளறுகிறாய்?" என்று உண்மையை மறைக்க அரும்பாடுபட்டார்.

"அவனை ஏன் மிரட்டுகிறீர்கள் அஸ்லாம்? பையன் உண்மையைத்தான் கூறுகிறான். நீங்கள்தான் மூடி மறைக்கிறீர் கள். இந்தப் பொற்காசை நான்தான் நெய் டின்னில் வைத்தேன். உங்களை சோதிப்பதற்காகத் தான் அதைச் செய்தேன். இனியும் பொய் பேச முயன்றால், உங்கள் .தலை போய் விடும்" என்று பீர்பால் மிரட்ட, அஸ்லாம் உண்மையை ஒப்புக் கொண்டு பொற்காசை பீர்பாலிடம் திருப்பித் தந்தார்.

"சரிதான்! நீங்கள் மதுசூதனிடம் கடன் வாங்கிய 20 முகராக்களையும் இதேபோல் என்னிடம் திருப்பித் தந்துவிடுங்கள்" என்றார் பீர்பால். "நான் மதுசூதனிடம் கடன் வாங்கவே இல்லை" என்று அஸ்லாம் பழைய பல்லவியைப் பாட, இதைக் கேட்டதும் பீர்பால் "அஸ்லாம்! இனியும் பொய் பேசினால், உங்களுக்கு தூக்கு தண்டனை நிச்சயம்!" என்று அஸ்லாம்கானை பயமுறுத்த, அவன் உண்மையை ஒப்புக்கொண்டு கடனைத் திருப்பிக் கொடுப்பதாகக் கூறி பீர்பாலிடம் மன்னிப்புக் கேட்டு, வாங்கிய கடனை மொத்தமாக திருப்பி அளித்தான். பீர்பாலின் புத்திசாலித்தனத்தை, அக்பர் வெகுவாகப் பாராட்டினார்.

(முற்றும்)




- 1622 - வேர்ஜினியாவில் ஜேம்ஸ்டவுன் நகரில் அல்கோன்கியான் பழங்குடிகள் 347 ஆங்கில குடியேற்றவாசிகளைப் படுகொலை செய்தனர்.
- 1829 - கிரேக்கத்துக்கான எல்லைகளை மூன்று வல்லரசுகளான பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா ஆகியன வரையறுத்தன.
- 1873 - புவேர்ட்டோ ரிக்கோவின் ஸ்பானிய தேசிய சபையில் அந்நாட்டில் அடிமைத் தொழிலை அழிக்க சட்டமியற்றப்பட்டது.
- 1895 - முதன் முதலாக லூமியேர சகோதரர்கள் அசையும் திரைப்படத்தை பிரத்தியேகமாகக் காண்பித்தார்கள்.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி, லித்துவேனியாவிடம் இருந்து மெமெல் பிரதேசத்தைக் கைப்பற்றியது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: பெலாரசின் காட்டின் நகர மக்கள் அனைவரும் நாசி ஆதிக்கவாதிகளால் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர்.
- 1945 - அரபு கூட்டமைப்பு கெய்ரோவில் அமைக்கப்பட்டது.
- 1960 - ஆர்தர் ஷாவ்லொவ், மற்றும் சார்ல்ஸ் _வுன்ஸ் ஆகியோர் லேசருக்கான முதலாவது காப்புரிமத்தைப் பெற்றார்கள்.
- 1965 - இலங்கையில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து டட்லி சேனநாயக்கா தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்தது.
- 1993 - இன்டெல் நிறுவனம் முதல் பெண்டியம் chip (80586) இனை அறிமுகம் செய்தது.
- 1995 - சோவியத் விண்வெளிவீரர் வலேரி பொல்யாக்கொவ் விண்ணில் 438 நாட்கள் கழித்து விட்டு பூமி திரும்பினார்.
- 1997 - ஹேல்-பொப் வால்வெள்ளி பூமிக்குக் கிட்டவாக வந்தது.
- 2004 - ஹமாஸ் இயக்கத்தை ஆரம்பித்தவர்களில் ஒருவரான அஹமது யாசின் இஸ்ரேலிய வான தாக்குதலில் கொல்லப்பட்டார்.
- 2006 - பாஸ்க் ஆயுதக்குழு ஈ-டிஏ காலவரையறையற்ற போர் நிறுத்தத்தை அறிவித்தது.

பிறப்புக்கள்


- 1868 - ரொபேர்ட் மில்லிக்கன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1953)
- 1931 - பேர்ட்டன் ரிக்டர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

இறப்புக்கள்

- 1627 - பிலிப்பே டி ஒலிவேரா, யாழ்ப்பாணத்தின் முதலாவது போர்த்துக்கேய ஆளுநர்.
- 1952 - டி. எஸ். சேனநாயக்கா, இலங்கையின் முதலாவது பிரதமர் (பி. 1884)
- 2005 - ஜெமினி கணேசன், தமிழ்த் திரையுலக நடிகர் (பி. 1920)

சிறப்பு நாள்

- உலக நீர் தினம்



### சர்வதேச தண்ணீர் தினம்

உலகம் இயங்குவதற்கு, தண்ணீர் என்ற சக்கரம் அவசியமானது. இது ஐம்பூதங்களில் ஒன்று. இயற்கையுடன் தொடர்புடையது. நேரடியாகவும், மறைமுகமாகவும் அன்றாட வாழ்வின் பெரும்பாலான பணிகளுக்கு தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது.

இதன் முக்கியத்துவத்தை உணர்த்தவும், சிக்கனமாக பயன்படுத்த வலியுறுத்தியும் மார்ச் 22ஆம் திகதி, உலக தண்ணீர் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

மக்கள்தொகை பெருக்கம், தொழில் வளர்ச்சியால் தண்ணீரின் தேவை அதிகரித்துள்ளது. ஆனால் ஆண்டுக்கு ஆண்டு, உலகுக்கு கிடைக்கும் நல்ல நீரின் அளவு குறைகிறது. மூன்றாம் உலகப்போர் வருமானால் அது தண்ணீருக்காகத்தான் என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். குடிநீர், சுகாதாரம், விவசாயம், கால்நடைகளுக்கு என பல வழிகளில் தண்ணீரின் பயன்பாடு அவசியம். பூமியில் 70.8 விழுக்காடு நிலப்பரப்பில் நீர் உள்ளது. ஆனால் குடி நீர் வளம் மிகவும் குறைவு.

மனிதர்களே இயற்கை வளத்துக்கு மதிப்பு அளிக்க வேண்டும். இணக்க சூழ்நிலையில் வாழ்வதற்கு நீர் வளமும் இயற்கை மூல வளமும் உத்தரவாதம் அளிக்க முடியும். இல்லை என்றால் மனித குலம் ஒரு நாள் கூட பூமியில் வாழ முடியாது. உயிரைப் பேணிக்காக்க வேண்டும். இயற்கை வளத்தையும் பேணிக்காக்க வேண்டும்.

**வருக வருக எங்கள் வான்மழையே-எங்கள்**
**வாழ்வில் இனிக்கிற தேன்துளியே**
**தருக தருக உந்தன் தரிசனமே-எட்டுத்**
**திசைகள் அளந்துவரும் பூரணமே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....ஒரு மூலவருக்கு அபிஷேகம் செய்து முடிக்க குறைந்தபட்சம் மூன்று மணி நேரம் எடுத்துக் கொள்கிறார்கள்.

இந்த அபிஷேகங்களை மணிக் கணக்கில் சலிப்பேதுமில்லாமல் பர வசத்துடன் பக்தர்கள் கண்டுகளிக்கின் றார்கள். சதுரகிரித் தலத்தில் இந்த அபி ஷேகங்கள்தான் சிறப்புப் பெற்றவை களாகக் கூறப்படுகிறது.

அபிஷேகம் முடிந்த பிறகு தீபாரா தனை நடைபெறுகிறது.

முன்பே சிவபெருமான் பிரம்மச் சாரிகள் மட்டுமே தனக்குப் பூஜைகள் செய்ய வேண்டும் என்று சொல்லி யிருப்பதால் இப்பொழுதும் திரு மணமாகாத பிரம்மச்சாரி ஒருவர்தான் பூசாரியாக சந்தன மகாதேவருக்குப் பூஜைகள் செய்கிறார்.


தற்போது சுப்புராம் என்பவர் சந் தன மகாலிங்கருக்குப் பூசாரியாகப் பணி புரிகிறார். இவருக்கு உதவியாக சுந்தரம் என்ற மலைவாசியும் அருகில் இருக்கிறார்.

இப்பொழுது திருநீறு பிரசாதமாக வழங்கப்படுகிறது. பெரியதொரு தாம்பாளத் தட்டில் அபிஷேகம் செய்த விபூதியை எடுத்து வந்து தாராளமாக வழங்குகின்றனர்.

அதேசமயம் சந்தன மகாதேவிக்கும் கற்பூர ஆரத்தி நடைபெறுகிறது. ஆனந்த தரிசனம்.

இந்தத் தரிசனத்தை சந்தன மகா லிங்கர் சன்னதியிலிருந்து அண்ணார் ந்து பார்த்தாலே போதும், தெளிவாகத் தெரியும்.

சட்டைநாதர் குகையை மறுநாள் பார்த்துக் கொள்ளலாம் என்ற முடிவு டன் அம்மனின் குங்குமப் பிரசாதத்தை



சந்தன முருகன்

அணிந்து கொண்டு கீழே இறங்கத் துவங்குகிறோம்.

சிவனடியாரும் எங்களைப் பின் தொடருகிறார்.

சுவாமி, சந்தன மகாலிங்கத்தைக் குடும்பஸ்தராக மாற்றிய பாண்டிச்சேரி க்காரரைப் பற்றிச் சொல்லுங் களேன். இதோ பாண்டிச் சேரி முசியே ஒருத்தரும் நம் முடன் இருக்கிறார். அவருக் கும் சந்தோஷமாக இருக்கும் என்று சிவனடியாரை கதை சொல்ல நினைவுபடுத்துகி றார் சாக்ரடீஸ்.

சிவனடியார் புன்னகையு டன் கதையை விட்ட இடத் திலிருந்து தொடருகிறார்.

இந்தச் சந்தன மகாலிங் கத்தை பார்வதிதேவி பூஜி த்த பிறகு சட்டைமுனி இந் தப் பூஜையைத் தொடர்ந்தார்.

அவருக்குப் பிறகு யார் யார் பூஜையைத் தொடர்ந்து செய் தார்கள் என்பதற்கான தகவல் இல்லை.

இறுதியாக சந்தன மகா லிங்கத்தைப் பூஜை செய்த சிவாச்சாரியாரைப் பற்றிய தகவல்தான் கிடைக்கிறது.

ஆந்திராவிலிருந்து மகா லிங்கரைத் தரிசிக்க வந்த சிவாச்சாரியார் மலைப்பளி ஞர் ஒருவர் பூஜை செய்து வந்த சந்தன மகாதேவரைக் கண்டதும் என்ன தோன்றிற்றோ தெரிய வில்லை. நீண்டநேரம் அங்கேயே அமர் ந்து விட்டார்.

சாமியாரின் தவசிக் கோலத்தைக் கண்ட மலைப் பளிஞருக்கு உள்ளு ணர்வில் ஏதோ குறிப்பு கிடைக்க, அன் றைய பூஜையை அவரையே செய்யச் சொன்னார்.

மகிழ்ச்சியுடன் பூஜை செய்தார். சாப்

**ஆன்மீகம் 69**

பிடுவதற்கு சுந்தர மகாலிங்கர் பிரசாதம் தரப்பட்டது. அடுத்த நாளும் மலைப் பளிஞர் அவரையே பூஜை செய்யச் சொன்னார். அப்படியே ஏன் எதற்கு என்று கேள்வி கேட்காமல் செய்தார்.

மூன்றாம் நாள் அந்த பளிஞர் வர வில்லை. அதற்கடுத்த நாளும் வர வில்லை. சந்தன மகாலிங்கத்து பூஜைப் பணியை தன்னிடம் ஒப்படைத்து அந்த பளிஞன் வடிவில் வந்த சந்தன மகாலிங்கர்தான் என நம்பத் தொடங் கினார்.


அதற்கடுத்த நாள் யாருக்காகவும் சாமியார் காத்திருக்கவில்லை. அருவி நீரில் அபிஷேகம் செய்து அருகிலிரு ந்த செடியில் இருந்து பறித்த பூவை வைத்து வணங்கத் தொடங்கினார்.

அமாவாசையன்று மட்டும் சந்தன மகாதேவருக்கு அபிஷேகமும் ஆராத னைகளும் நடைபெற்றன. பூஜைக்குத் தேவையான பொருட்களை மலைப் பளிஞர் சிலர் கொண்டு வந்து கொடுத் தனர்.

மலைப்பளிஞர் வடிவில் வந்து தன்னை பூஜை செய்யச் சொன்னது சாட்சாத் அந்த சந்தன மகாலிங்கர் தான் என்று எண்ணிய சிவாசாமிகள் மனநிறைவோடு தம் தெய்வப் பணி யைத் தொடர்ந்தனர். (தொடரும்)




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



**81**

....அடுத்த நாள் கிறிஸ் மஸ்- ஏசு பிறந்த அந்த நன்னாளில் இந்தப் பாசச் சுடரின் பாதம் என் வீட்டில் படப் போவதை எண்ணி பரபரப்பாக இருந் தேன். பகல் உணவு அருந்தி விட்டுக் குப் புறப்பட்டோம்.

அப்போது செம்மல் சிறுசேமிப்புத் துறைக்குத் தலைவர். ஒரு அமைச்ச ருக்கு இருந்த பாதுகாப்பும், மரியா தைகளும் அவருக்கும் இருந்தது. நம் பியார் என்ற ஒரு நல்ல மனிதர் பாது காவலராக இருந்தார். சேமிப்புத் தலை வர் என்ற வகையில் அவர் போகுமி டங்களைக் காவல் நிலையங்களுக் குத் தெரிவிக்க வேண்டியது நம்பி யாரின் பொறுப்பாக இருந்தது. நாங் கள் திருச்சியிலிருந்து புறப்படுமுன் நாகூர் காவல் நிலையத்துக்கு தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு செம் மல் என் வீட்டுக்கு வருவதைச் சொன் னார் நம்பியார்.

மாலை 6 மணி நாகையில் தேர் தல் பிரசாரத்தை முடித்துக் கொண்டு நாகூர் வந்தோம். எனக்குப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. நாகூர் ஆண் டவன் சன்னிதானத்துக்கு எதிரே உள் ளது என் தெரு. அதற்கு அடுத்த தெரு வில் உள்ளது என் மாமா வீடு. இரு தெரு முழுவதும் கூட்டம்.

கால்மாட்டுத் தெருவில் உள்ள என் வீட்டில் இறங்கினோம். உள்ளே அழைத்துப் போனேன். வீடெங்கும் பெண்கள் கூட்டம். என் வீட்டிற்கும் என் மாமா வீட்டிற்கும் இடையிலுள்ள கொல்லை வழியே செம்மலை அழைத் துக் கொண்டு என் மாமா வீட்டிற்குப் போனேன். அங்கும் பெண்கள் கூட்டம். என் தாயை அறிமுகப்படுத்தி



னேன். யாரும் எதிர்பாராத ஒன்றைச் செய்து அனைவரையும் அதிர வைத் தார். என் தாயின் காலைத் தொட்டு வணங்கினார். நான் கலங்கிவிட் டேன். எ[illegible] த்தை முழுவதுமாக அன்று அவள் அடைந்துவிட்டாள்!

அம்மா! உங்க பிள்ளை என்கி ட்டே பதினெட்டு வருஷமா இருக் கிறான். அவனைப் பெத்த உங் களை பாக்கணும்னு தோணிச்சு. வந்தேன். ஆசீர்வதியுங்க என்றார்.

என் தாய்க்கு ஏதும் புரியவில்லை. அதன் பின் என் மாமா வீட்டுக் கூட த்தில் செம்மலை அமர வைத்தேன்.

அங்கே என் சகோதரன் பிலிம்கோ [illegible]ந்தான். ஏன் இவ்வளவு கூட்டம்? என்று கேட்டேன்.

நாங்கள் யாருக்கும் சொல்லவி ல்லை. ஐந்து மணிக்கு பொலிஸ் வந்தது. விடயம் பரவிவிட்டது. ஒரு மணி நேரத்தில் இந்தக் கூட்டம் சேர்ந்துவிட்டது, தடுக்க முடியலே என்றான்.

பதினெட்டு ஆண்டுகளாக நான் அவரிட்ட உணவைத்தான் உண்டு வளர்ந்தேன். அவருக்கு ஒருவேளை உணவு படைக்க முயன்றேன்; முடிய வில்லை.' ஏதாவது டிபன் கொடு போதும் என்றார்.

அவருக்குச் சில இனிப்பு வகை பிடிக்கும். அவற்றை அவர் முன் வைத்து உண்ண வேண்டினேன். அவரை உண்ண விடவில்லை கூடி யிருந்த பெண்களும், பிள்ளைகளும். எல்லோரும் அவரிடம் கை நீட்டினர். உங்க கையால் எடுத்துக் கொடுங்க என்றார்கள். எல்லோருக்கும் கொடு க்கவே அவருக்கு நேரம் சரியாக இருந்தது. கோஷா முறையுள்ள என் உறவுக்காரர்கள் கூட கை நீட்டினர். பாதிவயிறு கூட நிறையாமல் சாப் பிட்டார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை தேர்தலில் இம்முறை சட்டவிதிகள் மீறும் செயற்பாடு குறைவு

## தேர்தல் ஆணையாளர் சுட்டிக்காட்டு

நாட்டில் இதுவரை நடந்து முடிந்த தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் முன்னொருபோதும் இல்லாத வகையிலான அமைதியான சூழலை மேல் மற்றும் தென் மாகாண சபை தேர்தல் களங்களில் காணக்கூடியதாகவுள்ளதென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

வன்முறைகள் மற்றும் தேர்தல் சட்டவிதிகளை மீறும் செயற்பாடுகள் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே பதிவாகியிருப்பதாக சுட்டிக்காட்டிய ஆணையாளர், போஸ்டர்கள், கட்அவுட்கள் காரணமாகவே அநேகமான மோதல்கள் இடம்பெற்றிருப்பதாகவும் கூறினார்.

மேல் மற்றும் தென் மாகாண சபைகளின் பாதுகாப்பினை பலப்படுத்தும் முகமாக சுமார் 16 ஆயிரம் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்னவிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கமைய தற்போது வாக்களிப்பு நிலையங்களில் 8 ஆயிரத்து 500 பொலிஸாரும் ரோந்து நடவடிக்கைகளுக்கென 2 ஆயிரத்து 500 பொலிஸாரும் வாக்கு எண்ணும் நிலையங்களில் சுமார் 3 ஆயிரத்து 500 பொலிஸாரும் ரோந்து நடவடிக்கைகளுக்கென ஆயிரத்து 500 பொலிஸாரும் சேவையில் ஈடுபடுத்தப்படுவரெனவும் ஆணையாளர் தெரிவித்தார்.

இம்முறை தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் அழைக்கப்படவில்லையெனவும் உள்நாட்டைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் பேர் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்படுவரெனவும் அவர் கூறினார்.

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் தேர்தல்கள் ஆணையாளருடன் இணைந்து பொலிஸ் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார். (2)

# கைதான மீனவர்களுடன் படகுகள் விடுவிக்கப்பட்டால் பேச்சுவார்த்தை

## தமிழக முதல்வர் திட்டவட்டம்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 75 பேரும் விடுவிக்கப்பட்டால் மாத்திரமே திட்டமிட்டபடி எதிர்வரும் 25ஆம் திகதி இலங்கை மற்றும் இந்திய மீனவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தை நடக்கும் என்று தமிழக அரசாங்கம் அறிவித்துள்ளது.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இந்த விடயத்தை வலியுறுத்தி கடிதம் ஒன்றை இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்த கடிதத்தின் படி, தற்போது இலங்கை கடற்படையினர் மீண்டும் தமிழக மீனவர்களை கைது செய்துள்ளனர். அவர்கள் இலங்கை- இந்திய மீனவர்களின் பிரச்சினை தீர்க்கப்படுவதை விரும்பவில்லை என்பது புலனாகிறது.

இந்த நிலையில் கைதாகியுள்ள அனைத்து மீனவர்களும், அவர்களின் படகுகளுடன் விடுவிக்கப்பட்டால் மாத்திரமே இந்த பேச்சுவார்த்தை நடைபெறும் என்று ஜெயலலிதா எச்சரித்துள்ளார். (2)

# ஜனாதிபதி தேர்தல் அடுத்தாண்டு நடைபெறும்

(கொழும்பு)

அடுத்த ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடந்து கூறுகையில்,

2015 ஆம் ஆண்டு சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும்.

அந்த தேர்தலிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இலகு வெற்றியீட்டுவார்.

ஜனாதிபதி மஹிந்தவை மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாக்க உயிரைக் கொடுத்து முயற்சிப்போம்.

வேறும் ஒருவர் ஜனாதிபதி ஆகக் கூடிய சாத்தியம் தற்போதைக்கு கிடையாது.

நாட்டின் ஜனாதிபதி ஆகக்கூடிய தகுதியுடைய எவரும் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இல்லை என அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார். (2)

# விசா சட்டங்களை மீறிய சீனப்பிரஜைகள் கைது

(கொழும்பு)

மூன்று சீனப் பிரஜைகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விசா சட்டங்களை மீறிச் செயற்பட்டதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பு கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் பொருட்கள் விற்பனை செய்து கொண்டிருந்த போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 30, 49 மற்றும் 50 வயதான சீனப் பிரஜைகளே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர். சந்தேகநபர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை நாணயத் தாள்களை வைத்திருந்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ரிதீகம பிரதேசத்தில் வைத்து குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஆயிரம் மற்றும் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

பனாகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 40 மற்றும் 49 வயதானவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (2)


**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**VACANCIES**

Applications are invited by me up to 17.04.2014 from suitably qualified persons for the following posts.

**POST- UNIVERSITY MEDICAL OFFICER ( University of Jaffna, Vavuniya Campus, Faculty of Engineering, Kilinochchi)**

The University is looking for a highly motivated individual. Training in counseling will be an added qualification.

**QUALIFICATIONS:**

Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner.

NOTE: One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting for study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

Salary Scale: U- MO 1 (II) Rs. 28,360 - 10 x 645 ; 1 x 790 - 35,600/- p.m.

Selection: By Structured Interview

**POST - CURATOR (LANDSCAPE), GRADE III ( University of Jaffna, Vavuniya Campus)**

**QUALIFICATIONS:**

(1). Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/Horticulture/Floriculture/Forestry from a recognized University /HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

OR

(2).Should possess a four year special Degree in Botany of a recognized University/HEI with not less than two (02) years of experience in Landscaping in State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

Salary Scale: U- EX1 (II) Rs. 26,020 - 3 X 585 - 27,775 (EB) 28,420; 12 X 645 -36,160/- p.m.

Selection: By Structured Interview

**POST - CHIEF SECURITY OFFICER, GRADE II ( University of Jaffna)**

**QUALIFICATIONS:**

1. An Officer not below the rank of Assistant Superintendent of Police, Captain of the Army or an officer of equivalent rank in the other Armed Services.

   OR

2. A Person who possesses a degree from a recognized University/ Higher Educational Institutions with not less than five (05) years experience in Security work.

   OR

3. A holder of the post of Security Inspector, Grade I or above in the University Security Services and confirmed in the present post with not less than eight (08) years satisfactory service in those grades.

AGE: Not more than 45 years.

Salary Scale: U-EX 1(II) Rs. 26,020-3 X 585 - 27,775 (EB) 28,420; 12 X 645 - 36,160/- p.m.

Selection: By Structured Interview

**POST- ASSISTANT REGISTRAR ( LEGAL & DOCUMENTATION)**

**QUALIFICATIONS:**

L.L.B Degree of a recognized University/ Attorney-at-Law with not less than 03 years experience in Court Work, Legal Work relating to Corporations/ Companies and drafting legal documents.

Salary Scale: U-EX 1(II) Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;12 X 645 -36,160/- p.m.

Selection: By Structured Interview

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Non Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post on a payment of Rs.100/- per application form at the People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order for Rs.100/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self-addressed stamped envelope** 23x10 c.m. in size.
The envelope containing duly filled application form must bear **"the name of the post applied for"** on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected

REGISTRAR,
University of Jaffna,

(சி-6791)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கத் தீர்மானத்திற்கு ஆதரவளிக்கப்படமாட்டாது

## அவுஸ். வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷொப் தெரிவிப்பு

**அமெரிக்காவின் தீர்மானத்திற்கு ஆதரவளிக்கப்படமாட்டாது என அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்திற்கு ஆதரவளிக்கப்படமாட்டாது என அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷொப் தெரிவித்துள்ளார்.**

தீர்மானம் நிறைவேற்றுவதற்கு முன்னதாக இலங்கையின் கள நிலவரங்கள் பற்றி கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் கடந்த காலங்களில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களுக்கு அவுஸ்திரேலியா இணை அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புனர்நிர்மானம் மற்றும் புனர்வாழ்வு அளித்தல் தொடர்பில் இலங்கை எட்டியுள்ள முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வேண்டாம் என அவுஸ்திரே லியா தனது நட்பு நாடுகளிடம் கோரி வருவ தாக அந் நாட்டு ஊடகமொன்று தகவல் வெளி யிட்டுள்ளது. கடந்த 18 மாதங்களில் ஆயி ரத்து 100 இலங்கைப் புகலிடக் கோரிக்கை யாளர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது,

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் இலங்கையில் பாரியளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக பிஷொப் தெரிவித்துள்ளார். இலங்கையின் நல்லிணக்க முனைப்புக்களுக்கு ஆக்கபூர்வமான முறையில் பங்களிப்பினை வழங்க வேண்டியது அவசியமாகும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (2)

# இந்திய பிரஜை கைது

விசா அனுமதியின்றி இலங்கையில் தங்கியிருந்த இந்திய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்திய பிரஜை கம்பஹா மாவட்டம் யக்கலமுல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறி குற்றச்சாட்டில் இந்திய பிரஜையை தாம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யக்கலமுல்ல நாக்கியாதெனிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் சந்தேக நபர் தங்கியிருந்தார்.

34 வயதான இந்திய பிரஜை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (2)

# முஸ்லிம் குடியேற்றங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்

## பொதுபலசேனா கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் அண்மைக்காலத்தில் இடம்பெற்றுவரும் மிதமிஞ்சிய முஸ்லிம் குடியேற்றங்களை உடனடியாக அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும். சிங்கள தமிழ் மக்களையும் இணைத்து குடியமர்த்த வேண்டுமென பொதுபல சேனா கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் அரசாங்கத்தில் இருந்து கொண்டு தேசத்துரோக செயல்களில் ஈடுபட்டு வரும் முஸ்லிம் அமைச்சர்களை வெளியேற்ற வேண்டும் எனவும அவ்வமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தேஞானசார தேரர் தெரிவித்தார்.

கிருலப்பனையிலுள்ள பொதுபல சேனாவின் தலைமை காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் தேரர் மேலும் தெரிவிக்கையில்,

வில்பத்துவில் இருந்து மன்னார் வரையில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுவரும் முஸ்லிம் குடியேற்றங்களை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டு வடக்கிலும் முஸ்லிம் ஆதிக்கத்தை பரப்பச் செய்து சிங்கள, தமிழ் மக்களை புறக்கணிக்கும் இச் செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கின்றோம்.

முஸ்லிம் மதவாதத்தை பரப்பி இலங்கையை சீரழிக்கும் தீவிரவாத செயற்பாடுகளுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாடடோம் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# முச்சக்கரவண்டி சாரதியை கொலை செய்த மூவருக்கு மரண தண்டனை

(கொழும்பு)

முச்சக்கர வண்டி சாரதி ஒருவரை கொலை செய்தமை தொடர்பான குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்பட்ட மூவருக்கு நீர் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.ஏ. கபூர் நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்து தீரப்பளித்தார்.

களனி வனவாசலை பிரதேசத்தைச் சேர்ந்த மூவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முச்சக்கர வண்டி சாரதியான இந்துனில் கிரிசாந்த என்பவரை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு விசாரண முடிவில் குற்றவாளிகளாக காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர். (2)


உலக நீர் தினம் - மார்ச் 22 - நீரும் சக்தியும்

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு

WORLD WATER DAY 2014 & water energy 22.03.2014

ஊருக்கு நல்லது செய்வோம்

ஊருக்கு நல்லது செய்வோம்- எங்கள்
ஊரின் வளநலம் பெருகிடக்- கூடி
ஊருக்கு நல்லது செய்வோம்-
எண்ணித் துயரினில் வாழ்ந்தோம்-தண்ணீர்
வண்டிக்கு கால் நோக வெகுநேரம் காத்தோம்- இப்போ
வருகுது தண்ணீ - பைப்புத்
தண்ணி வருகுது எம் துன்பம் போக்க
ஊருக்கு நல்லது செய்வோம்- எங்கள்.....
இரணைத்தாய் (இரணைமடு) எங்களின் தாயே
அவள் கொள்ளிடம் மேலெழத் திட்டம் வகுப்போம்
நெடும் கால்வாய் செப்பனிடுவொம்-அங்கு
நீரின் விரயம் தடுத்து வயல் காத்து
ஊருக்கு நல்லது செய்வோம்- எங்கள்.....
கிளிநொச்சி மக்கள் எம் உறவே
அவர் நன்னலம் பேணுதல் எங்கள் கடனே
இரணை நீர் அளவினைக் காக்க
உப திட்டங்கள் வைப்பது அரசினர் கடனே
ஊருக்கு நல்லது செய்வோம்- எங்கள்.....



மலகூடக் கழிவகற்ற யாழ் மாநகர் தோறும் குழாய்கள் - பொருத்தி
நிலக்கீழ் நீரினைக் காப்போம்- மேலும்
மலகூட நீரைச் சுத்தமே செய்து- எம்
கடலோர கிராமங்களில் களனிகள் காண்போம்
ஊருக்கு நல்லது செய்வோம்- எங்கள்.....
உவர் நீரேரி மறித்து மழை நீரைச் சேர்த்து
நில வளம் நீர் வளம் காப்போம்
எங்களின் நன்னீர் திட்டம்- இதை
எப்போதும் காப்பது எம் கடன் தானே
ஊருக்கு நல்லது செய்வோம்- எங்கள்.....
மலகூடம் சுகநலத் திட்டம்- அதை
துப்புரவாகவே பேணி நடப்போம்
காலைக் கடனை முடித்து- நன்கு
கைகளை கால்களை கழுவி நாம் காத்து
ஊருக்கு நல்லது செய்வோம்- எங்கள்.....
உண்மைப் பொதுப்பணி செய்வோம்- எங்கள்
வாழ்வின் நலன் மட்டும் பெரிதென காணோம்
சுகபோகம் எமக்கு வேண்டாம்- எம்
சுக நலம் ஒன்றையே பெரிதெனக் காண்போம்
ஊருக்கு நல்லது செய்வோம்- எங்கள்.....

(மெட்டு: கும்மிப்பாட்டு)



திட்டப் பணிப்பாளர்
யாழ் – கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

0212220256 www.jkwssp.org

யாழ்-கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டமானது:
2,200 கோடி ரூபா நிதியில் 300,000 மக்களுக்கு குடி நீர்,
80,000 மக்களுக்கு சுகாதார வசதி மற்றும் 55,000 விவசாயிகளுக்கு
நீர்ப்பாசன அபிவிருத்தி மற்றும் யாழ் நீர் வள முகாமை மேம்பாடு
[illegible] நடைமுறைப்படுத்தும் ஒரு பல்நோக்குத் திட்டமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியர்களே! தோளோடு தோள் இணைவோம்!

-பழ.நெடுமாறன்-



தமிழர் வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் பேரழிவு நம்மை எதிர்நோக்கி நிற்கிறது. 2009 ஆம் ஆண்டு மே மாதம் தமிழீழத்தின் கடற்கரையில் ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட நம்முடைய உடன்பிறப்புக்கள் பதைபதைக்க படுகொலை செய்யப்பட்டார்கள். அதே கடலின் மறுகரையில் தமிழகத்தில் ஏழரைக்கோடி தமிழ் மக்கள் வாழ்ந்தும், அந்த இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்த முடியாமல் புலம்பி நின்றோம். சிங்களவரைவிடப் பன்மடங்கு அதிகமான எண்ணிக்கையில் தமிழ்நாட்டில் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் கொதித்து எழும்பினால் நம்முடைய நிலைமை என்னவாகும் என்ற அச்சமே கொடிய சிங்களவர்களுக்கு இல்லை. அந்த அச்சம் அவர்களுக்கு ஏற்படாததற்கு யார் காரணம்?

சிங்களவருக்கு முட்டுக்கொடுத்துத் துணையாக நின்ற இந்திய அரசும், அதற்கு பக்கபலமாக நின்ற திராவிட கட்சிகள் மட்டும் அல்ல இதற்குக் காரணம். தமிழ்த் தேசியர்கள் ஒன்றுபட்டு நிற்காததே முக்கிய காரணம் ஆகும்.

இலங்கை என்னும் சின்னஞ்சிறிய நாட்டில் பெரும்பான்மையரான சிங்களவர்கள் சிறுபான்மையரான தமிழர்களை அடக்கி ஒடுக்கிவிட்டார்கள் என்ற செய்தி உலகமெல்லாம் பரவியிருக்கிறது. நாளை மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் பல நூற்றாண்டு காலமாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களை அந்தந்த நாட்டில் உள்ள பெரும்பான்மையினரும் இதேபோல ஒடுக்குவதற்கு ஒரு தூண்டுதலாக இது அமைந்துவிட்டது. ஈழத் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட போது அவர்களுக்கு மிக அருகில் வாழும் தமிழ்நாட்டுத் தமிழர்களால் அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களைக் காக்கவா தமிழ்நாட்டுத் தமிழர்கள் வரப்போகிறார்கள் என்ற அலட்சிய மனோபாவம் அந்நாடுகளில் உருவானால் அங்கு வாழும் தமிழரகளின் நிலை என்ன?

இலங்கை இராணுவத்திற்கு இந்தியாவில் பயிற்சி கொடுப்பதும், அவர்களுக்குத் தேவையான ஆயுதங்களை வழங்குதலும் அந்த நாடு தன்னைத்தானே காத்துக்கொள்வதற்காக அல்ல, ஏனென்றால் இலங்கைக்கு அருகே இந்தியாவைத் தவிர வேறு எந்த நாடும் கிடையாது. இந்தியாவோ நட்பு நாடு. அப்படியானால் இந்தப் பயிற்சியும், ஆயுதங்களும் இலங்கையிலே வாழும் தமிழர்களை இனப்படுகொலை செய்வதற்காக என்பது நன்கு தெரிந்திருந்தும் இந்திய அரசு தொடர்ந்து இலங்கைக்கு உதவி செய்வது ஏன்?

சார்க் நாடுகளில் ஒன்றான இலங்கைக்குப் பயிற்சியும், ஆயுதங்களும் கொடுப்பது இந்தியாவின் கடமை என நீட்டி முழங்கும் இந்திய தேசியவாதிகள் மற்றொரு சார்க் நாடான பாகிஸ்தானுக்கு அத்தகைய உதவிகளை அளிக்க மறுப்பது ஏன்? - என்பதற்கு விளக்கம் தருவது இல்லை. பாகிஸ்தானுக்கு கொடுக்கப்படும் ஆயுதங்கள் இந்தியாவிற்கு எதிராக மட்டுமே திருப்பப்படும் என்பதை உணர்ந்து எச்சரிக்கையாக இருக்கிற டில்லி அரசு இலங்கைப் பிரச்சினையில் மட்டும் அந்த நியாயத்தை எண்ணிப்பார்க்க மறுப்பது ஏன்?

தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் வாழ்கிறார்கள். ஆனால், அவர்களின் வாழ்வாதாரம் இன்றைக்குச் சிங்கள அரசினால் சிதைக்கப்பட்டிருக்கிறது. சிங்களக் கடற்படை தமிழக மீனவர்களைத் தொடர்ந்து வேட்டையாடுகிறது. 600 இற்கும் மேற்பட்ட தமிழ் மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான மீனவர்கள் தினமும் கைது செய்யப்பட்டு இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டு கொடுமை செய்யப்படுகிறார்கள். தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான பல நூறுகோடி ரூபாய் பெறுமான படகுகளும், வலைகளும் சிங்களக் கடற்படையால் சேதப்படுத்தப்பட்டுள்ளன. உலகின் ஐந்தாவது பெரிய கடற்படையான இந்தியக் கடற்படை தமிழக மீனவர்களைப் பாதுகாப்பதற்குப் பதில் அவர்கள் படுகொலை செய்யப்படுவதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சி மட்டுமல்ல பெரும்பாலான அகில இந்தியக் கட்சிகளும் தமிழக மீனவர்களை இந்திய மீனவர்களின் ஓர் அங்கம் என எண்ணிப்பார்க்க மறுக்கிறார்கள். இதற்கு எதிராக நாடாளுமன்றத்தில் கண்டனக் குரல் எழுப்பத் தயங்குகிறார்கள். ஈழத் தமிழர் பிரச்சினையில் மட்டுமல்ல தமிழக மீனவர்கள் பிரச்சினையிலும் நம்மை அலட்சியம் செய்யும் போக்கு அகில இந்தியக் கட்சிகளுக்கு உள்ளது. அதற்கு முழுமையான காரணம் தமிழ்த் தேசியர்களிடையே ஒற்றுமை இல்லாததே ஆகும்.

1938 ஆம் ஆண்டிலிருந்து இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழகம் போராடி வருகிறது. பல தமிழர்கள் தங்களுடைய இன்னுயிரை இந்தப் போராட்டத்தில் அர்ப்பணித்திருக்கிறார்கள். ஆனாலும், தமிழர்கள் தங்கள் மொழியைக் காக்க நடத்திய போராட்டத்தை இந்திய அரசும், இந்திய தேசியம் பேசுகிற பல கட்சிகளும் சிறிதும் மதிக்கவில்லை.

இந்தி தொடர்ந்து திணிக்கப்படுகிறது. 1965 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திப் போராட்டத்தில் எண்ணற்றவர்கள் செய்த உயிர்த் தியாகத்தின் விளைவாக தி.மு.க. ஆட்சிபீடம் ஏறியது. ஆனால், இந்தித் திணிப்புக்குக் காரணமான காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து மத்திய ஆட்சியில் சில அமைச்சர் பதவிகளைப் பெற்ற தி.மு.க. இந்தித் திணிப்பைத் தடுக்க எதுவும் செய்யவில்லை. தி.மு.கவின் அமைச்சர் ஒருவர் அதிகாரத்தில் இருந்த போதே தமிழகத்தின் நெடுஞ்சாலைகளில் உள்ள கற்களில் இந்தி வார்த்தைகள் பொறிக்கப்பட்ட கேவலமும் நிகழ்ந்தது.

சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து காவிரி நதியை தமிழர்கள் தங்களது உயிர்நாடியாகக் கருதி இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் பொறித்து வைத்தார்கள். ஆனால், அந்த காவிரி மீது நமக்கு உரிமை இல்லை என்று சொல்லி நமக்கு வரவேண்டிய நியாயமான நீரைத் தடுத்து நிறுத்தி கர்நாடகம் அடாவடித்தனம் செய்தபோது நடுவர் மன்றமும், உச்சநீதிமன்றமும் தலையிட்டு நமக்கு நீதி வழங்கின. ஆனால், அதை கர்நாடகம் ஏற்க மறுத்தது. கர்நாடகத்தில் உள்ள இந்திய தேசியம் பேசும் கட்சிகளில் கன்னட வெறி மேலோங்கி நின்றது. இந்திய தேசியக் கட்சிகளின் அனைத்திந்திய தலைமை இதைக் கண்டிக்க முன்வரவிலலை. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை மதிக்க மறுப்பது தேசிய ஒருமைப்பாட்டிற்கு உலை வைக்கும் என அவர்களை இன்று வரையிலும் எச்சரிக்கவில்லை. தமிழ்நாட்டில் உள்ள இந்திய தேசியக் கட்சிகளின் கிளைகள் கர்நாடகத்தில் உள்ள தங்கள் கட்சியின் தலைமை செய்யும் இந்தத் தவறை இன்று வரை கண்டிக்கவில்லை.

அதைப்போல முல்லைப் பெரியாறு, பாலாறு போன்ற பிரச்சினைகளிலும் இதைப்போல இந்திய தேசியக் கட்சிகள் தமிழகத்தை வஞ்சிததன. ஆனாலும், இந்திய அரசு இந்த தகாத போக்குகளைத் தடுத்து நிறுத்தி தமிழகத்திற்கு நியாயம் வழங்க மறுக்கிறது.

உலக நாடுகள் அணு உலைகளின் அபாயத்தை உணர்ந்து அவற்றை மூடி வருகிற நேரத்தில் அந்த அணு உலைகளை தமிழகத்தின் மீது மத்திய அரசு திணிக்கிறது. ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்கள் அணு உலையை வேண்டாம் என மறுத்த பிறகு தமிழகத்தில் கூடங்குளத்தில் தமிழர்களின் எதிர்ப்பிற்கு இடையே அதைப் பிடிவாதமாக நிறுவி அதனால் ஏற்படும் அழிவிற்குத் தமிழக மக்களை ஆளாக்கத் துணிந்துவிட்டது மத்திய அரசு. கூடங்குளம் மக்கள் உதயகுமார் தலைமையில் அதை எதிர்த்துப் போராடியபோது தமிழ்த் தேசிய அமைப்புகள் அதற்கு ஆதரவு தெரிவித்து களத்தில் இறங்கினார்கள். ஆனால், இந்தியத் தேசியக் கட்சிகள் இந்தப் போராட்டத்திற்கு எதிராக நின்றனர். தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகள் எதிர்ப்பும் தெரிவிக்காமல், ஆதரவும் தெரிவிக்காமல் பதுங்கின.

46 ஆண்டு காலத்திற்கு மேலாக திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் தமிழர்களின் உரிமைகள் பறிபோயின. தமிழ் தமிழ் என்று பேசி ஆட்சிபீடம் ஏறியவர்கள் தமிழை ஆட்சிமொழியாகவோ, பயிற்சி மொழியாகவோ ஆக்கவில்லை. வெள்ளையன் இந்த நாட்டை விட்டு வெளியேறி 66 ஆண்டுகள் ஆன பிறகும் ஆங்கிலமே அரசோச்சுகிறது. ஆங்கில வழிக் கல்வி அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் பரவி நிற்கிறது. இந்தி கூடாது என முழங்கியவர்கள் என்றென்றும் ஆங்கிலமே என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்கள்.

தமிழ்த் தேசியர்கள் தமிழைப் பயிற்சி மொழியாக்கவும், ஆட்சி மொழியாக்கவும் தனித்தனியாகப் போராடியதும், போராடுவதும் விழலுக்கு இறைத்த நீராகிவிட்டது. தமிழ்த் தேசியர்கள் ஒன்றுபட்ட மக்கள் போராட்டத்தை நடத்தியிருந்தால் திராவிடக் கட்சிகளின் சதியை முறியடித்திருக்க முடியும்.

வள்ளுவரிலிருந்து வள்ளலார் வரையிலும் மற்றும் பல்வேறு தமிழ்ச் சான்றோர்களும் மது என்னும் தீமையிலிருந்து மக்களைக் காத்து வைத்திருந்த நிலைமையில் தமிழ் மண்ணில் மதுவை ஆறாக ஓடச் செய்து சில தலைமுறையினரை அதற்கு அடிமையாக்கி குடும்பங்களைச் சீரழித்தவர்கள் திராவிடக் கட்சிகளைச் சேர்ந்தவர்களே.

சகல துறைகளிலும் தமிழ்ப் பண்பாட்டைச் சீரழித்தவர்களும் திராவிடக் கட்சியினரே. தமிழகத்தில் லஞ்சமும், ஊழலும் பரவி நிற்கின்றன. மல்லிகைத் தோட்டமாக விளங்கிய தமிழகத்தை கள்ளிக்காடாக மாற்றியவர்கள் திராவிடக் கட்சியினரே. விரிப்பின் பெருகும்.

வாக்குகளைப் பெறுவதற்காக இலவசங்களை வாரி வழங்கியும், ஊழல் மூலம் திரட்டிய பணத்தின் ஒரு சிறு பகுதியை அள்ளி வீசி தமிழ் மக்களை தன்மானமற்றவர்களாகவும், இரு கை ஏந்தி இரந்து நிற்பவர்களாகவும் மாற்றியவர்கள் திராவிடக் கட்சியினரே என்பதில் சந்தேகம் இல்லை. இதன் மூலம் ஜனநாயகத்தை அழித்துப் பண நாயகம் தலைதூக்கச் செய்தவர்களும் இவர்களே.

திராவிடக் கட்சிகள் உருவாக்கியிருக்கிற கள்ளிக்காட்டை வெட்டி எறிந்து தமிழ் மண்ணைப் பண்படுத்த வேண்டிய கடமை தமிழ்த் தேசியர்களுக்கு உண்டு. நம்மால் மட்டுமே இதைச் செய்ய முடியும். வேறு யாரும் செய்ய முடியாது. ஆனால், நம்மிடையே ஒற்றுமை இருந்தால்தான் இதைச் சாதிக்க முடியும்.

ராஜீவ் கொலை வழக்கில் 13 தமிழகத் தமிழர்களுக்கும், 13 தமிழீழத் தமிழர்களுக்கும் ஒட்டுமொத்தமாக தூக்குத் த்ண்டனை விதிக்கப்பட்ட பின்னணியில் ஆழமான சதி இருந்தது. அப்பாவிகளான 26 தமிழர்களைக் கொலைகாரர்களாகச் சித்தரித்து அதன் மூலம் தமிழ்த் தேசியர்களை அச்சுறுத்தி ஆமைகளாக, ஊமைகளாக ஒடுக்கி வைக்கும் திட்டத்துடன் இத்தண்டனை விதிக்கப்பட்டது. தமிழ்த் தேசியர்கள் கொஞ்சமும் அஞ்சாமல் இந்த அறைகூவலை ஏற்றோம். 26 தமிழர்கள் உயிர்காப்புக் குழுவை உருவாக்கி ஒன்றுபட்டுப் போராடினோம். எந்தத் தொழில் அதிபரையும் அல்லது பெரு வணிகரையும் நாம் அணுகவில்லை. மாறாக, எளிய மக்களிடம் நிதி திரட்டி உச்சநீதிமன்றம் சென்று 26 பேர்களின் வழக்கை நடத்தி 19 பேரை விடுவிக்கச் செய்தோம். மீதமிருந்த மூவருக்கு ஆயுள் தண்டனையும், நால்வருக்கு தூக்குத் தண்டனையும் விதிக்கப்பட்டபோது அதற்கு எதிராக மாபெரும் மக்கள் இயக்கத்தைக் கட்டினோம்.

மரண தண்டனை ஒழிப்பை மக்கள் இயக்கமாக மாற்றிக் காட்டினோம். தொடரந்து நாம் போராடியதன் விளைவாக அந்த ஏழு பேரின் வாழ்விலும் இப்போது விடியல் பிறநதிருக்கிறது. இந்தியத் தேசியக் கட்சிகளோ, திராவிடக் கட்சிகளோ இதற்கு எள்ளளவும் காரணமல்ல. 19 தமிழர்களை விடுதலை செயத உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை நாம் பெறுகிற வரையில் இவர்களில் யாரும் வாயைத் திறகக வில்லை. அஞ்சி நடுங்கி ஒடுங்கியிருந்தனர்.

தமிழக அரசியல் சந்தர்ப்பவாத, சுயநல, மேனாமினுக்கி, ஊழல் மயமான அரசியலாக திராவிடக் கட்சிகளால் மாற்றப்பட்டுவிட்டது. இந்த தீமைகளைச் சுட்டெரிக்க தியாகத் தீயை மூட்டுவதற்கு தமிழ்த் தேசியர்களால் மட்டுமே முடியும்.

தொண்டு, துன்பம், தியாகம் ஆகிய அடித்தளங்களின் மீது தமிழ்த் தேசியம் கட்டப்பட வேண்டும். தமிழக அரசியலில் இந்த உயர்ந்த நோக்கங்கள் காணாமற் போய்விட்டன. பொது வாழ்க்கைக்கு வருபவர்கள் பணம், பதவி, சுயநல நோக்கங்களை மட்டுமே ம்னதில் கொண்டு வருகிறார்கள். இதன் விளைவாக தமிழகப் பொது வாழ்க்கை மக்களிடம் மதிப்பிழந்துவிட்டது. பொது வாழ்க்கைக்கு வரும் எல்லோரையுமே மக்கள் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை மாற்றவேண்டும் என்று சொன்னால் எத்தகைய தியாகமும் செய்ய தமிழ்த் தேசியர்கள் தயாராக இருக்கிறோம் என்பதை நாம் செயல் வடிவில் காட்டினால்தான் மக்களுக்கு நம் மீது நம்பிக்கை பிறக்கும். அத்தகைய தியாக வாழ்விற்குத் தயாராகும்படி தமிழ்த் தேசியர்களை வேண்டிக கொள்கிறேன்.

நமது ஒரே அடையாளம் தமிழ்த் தேசியமே. தமிழர்களுக்கு அணிவிக்கப்பட்டிருக்கிற இந்தியம், திராவிடம் ஆகிய முகமூடிகளைக் கிழித்தெறியவேண்டும். இதைச் செய்ய நம்மால் மட்டுமே முடியும். முகமூடியை மாட்டியவர்கள் இதை ஒருபோதும் செய்யமாட்டார்கள். முகமூடிகளை மாட்டித் தமிழர்களை அடையாளம் தெரியாமல் செய்வது அவர்களின் நோக்கமாகும். இந்த தீய நோக்கத்தை மக்களிடையே நாம் அம்பலப்படுத்த வேண்டும்.

அகில இந்தியக் கட்சிகள் வலிமை குன்றியதோடு மட்டுமல்ல சிதறி வருகின்றன. திராவிடக் கட்சிகள் பதவி, பணம் ஆகியவற்றை மட்டுமே நம்பி வாழ்கின்றன. நம்முடைய எதிரிகள் பலவீனம் அடைந்துவருகிற இந்தக் காலகட்டத்தில் நாம் ஒன்றுபட வேண்டியது மிகமிக இன்றியமையாதது மட்டுமல்ல. இப்போது ஒன்றுபடாவிட்டால் இனி எப்போதும் ஒன்றுபடப் போவதில்லை என்பதைத் தமிழ்த் தேசியர்கள் உணர வேண்டும். நமது வலிமையை ஒன்றுதிரட்டி எதிரிகளை வெற்றி கொள்ளவேண்டிய காலம் பிறந்தாகிவிட்டது. என்னுடைய காலத்திலேயே இதைச் செய்து முடிக்க விரும்புகி றேன்.

எனக்கு முன் இங்கு பேசிய தோழர் மணியரசன் உட்பட தமிழ்த் தேசியத்திற்குத் தங்களை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டிருக்கிற தோழர்கள் இந்த மாபெரும் பணிக்குத் தோள் கொடுத்துத் துணை நிற்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

தமிழ்த் தேசியர்களே! தோளோடு தோள் இணைவோம். நம்மையும் காப்போம். நம்மை நம்பியிருக்கிற உலகத் தமிழர்களையும் காப்போம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனமும் அதனது தொழில்சார் பங்களிப்பும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)


சேதன விவசாயத்திற்கான உள்ளீடுகளாக சேதன் பசளை, மண்புழு பசளை, நன்மை தரும் நுண்ணங்கிகள், அசோலா என பலவற்றை வளர்த்தெடுத்து அதனை விவசாயிகளுக்கு வழங்கி அசேதன பசளைகளினதும் பீடை நாசினிகளினதும் பயன்பாட்டை குறைப்பதற்கு பாடுபடும் நல்ல செய்தியை எம்மினிய உறவுகளுக்கு தெரிவிப்பதில் எழுதும் இக்கைகள் மகிழ்வடைகின்றன.

வும் பீடைநாசினிகளாகவும் பயன்படுத்தத் தொடங்கி எமது சூழலையும் அவசியமின்றி மாசுபடுத்தி தற்போது சொல்லொணா துயரங்களை நோய்வடிவில் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

மிகவும் இலகுவாக கையாளக்கூடியதாக இவ்வாறான அசேதன இரசாயனங்கள் அமைந்துவிடுவதும் தேவைக்கதிகமாக கிடைக்கக் கூடியவாறு வடபுலத்தே இருப்பதுவும் இவற்றை அதிகளவில் பயன்படுத்துவதற்கான காரணமாகும். மேலும் இவற்

இரசாயனங்களை எமது விளைநிலத்தில் கொட்டிவிட வேண்டிய தேவையில்லை. வடபுலத்திலுள்ள பன்னாட்டு மற்றும் தென் பகுதி நிறுவனங்கள் அசேதன உள்ளீடுகளின் விற்பனையை பல்வேறு சலுகைகளை முன்வைத்து விவசாய பெருமக்களை அதற்குள் சிறைப்படுத்தி தமது சந்தைப்படுத்தலை கச்சிதமாக செய்து கொண்டிருக்கின்றன.

விவசாய செய்கையில் அசேதன விவசாய உள்ளீடுகளை நாம் முன்னிலைப்படுத்தி பரிந்துரைக்கும் போது வேறுவழியின்றி



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 49-II





உற்பத்தியாகும் ரைக்கோடேர்மா பூஞ்சணம்

விவசாய பெருமக்கள் இவற்றிலேயே தங்கியிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

இதற்கு மாற்று வழி கண்டுபிடிக்காவிடில் எமது விளை நிலங்களனைத்தும் மாசுற்று எமது சூழலையும் நாம் மாசுபடுத்தி விடும் நிலைக்கு தள்ளிவிடுவோம். குடாநாட்டில் அதிகரித்து வரும் நோய்கள் இதற்கு சான்றாகும். குறிப்பாக புற்றுநோயின் தீவிரம் இங்கு காணப்படுவதற்கு காரணம் கண்டறியப்பட வேண்டும். இவ்வாறான நோய்களுக்கு விவசாயத்தில் பயன்படுத்தப்படும் அசேதன இரசாயனங்களும் முக்கியமான காரணங்களாக ஊகிக்கப்படுகின்றன.

எமது பிரதேசத்தில் பாரம்பரிய முறையிலான விவசாயம் செய்யப்பட்ட காலத்திலிருந்து நாம் விலகி அசேதன விவசாய உள்ளீடுகளை அதிகளவிலான அளவில் உள்ளவாங்கத் தலைப்பட்டதிலிருந்து சூழலியல் பிரச்சினையை உள்வாங்கிவிட்டோம். உணவுற்பத்திக்காக பரிந்துரைக்கப்பட்ட போது சூழலில் ஏற்படப்போகின்ற தாக்கம் பெரிதாக கவனிக்கப்படவில்லை.

ஆனால் அது பின்னர் எமக்கான பிரச்சினையாக பூதாகரமாக எழுந்தபோது அதனை தவிர்க்க முடியாமல் திக்கித்திணறியதையும் நாம் நினைவுகூரலாம். ஆனால் இவ்வளவு நடந்தும் நாம் இன்னும் அசேதன இரசாயனங்களின் பயன்பாட்டை மட்டுப்படுத்த முடியவில்லை. பிரச்சினை இன்னும் அதிகமாகின்றதே தவிர குறைந்தபாடில்லை.

இந்நிலையில் சேதன விவசாயத்தை ஊக்குவிக்கின்ற எந்த தொழில்நுட்பத்திற்கும் நாம் முன்னுரிமையளிக்க கடப்பட்டுள்ளோம். இதற்கு சிறந்த உதாரணமாக

வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களும் செயற்பாடுகளும் சான்றாகும். எங்களது வளங்களை முழுமையாக பயன்படுத்தி பலருக்கு வேலைவாய்ப்பும் கொடுத்து சேதன முறை விவசாயஞ்செய்பவர்களுக்கு உந்துதலாக இந்நிறுவனத்தில் உற்பத்தியாகும் பொருட்கள் உதாரணமாகும்.

வட்டுக்கோட்டையிலுள்ள வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்தின் ஆரம்ப கால உருவாக்கத்திற்கும் வாழ்வாதார திட்டங்களுக்கும் கிறிஸ்தவ நிதி நிறுவனத்தினால் உதவிசெய்யப்படுவதும் அதனை ஆரம்பமாக வைத்து பல புதிய முயற்சிகளை முன்னின்று செய்துவரும் செய்துடிக்கும் இந்நிறுவனத்தை நல்லதொரு உதாரணமாக வைத்து எங்களூர் தொழிற்றுறைகளை உயர்த்திட இனி நாம் முயற்சி செய்ய வேண்டும் என்பதனையும் தெரிவித்து கிளிநொச்சியில் அமையும் விவசாய பீடத்தின் விவசாய உயிரியல் துறையில் உயிரியல் கட்டுப்பாட்டுக்கான ஆய்வுகள் மேலும் செய்யப்பட்டு எமது விவசாயிகளுக்கான சேதன உள்ளீடுகளை வழங்க வாய்ப்பு வருகின்றது என்பதையும் பதிவிலிட்டு உள்ளூர் உற்பத்தி நிறுவனங்களுக்கு மத்திய வங்கியின் அனுசரணையும் நிறைவாக கிடைக்க வேண்டும் எனவும் கருத்திட்டு இன்னும் இதுபற்றி மேலும் அடுத்த வாரம் பார்ப்போம். (தொடரும்)

விவசாய பீடத்தின் உயிரியல் துறையின் தொழில்நுட்ப அனுசரணையுடன் இவ்வாறான சேதன விவசாயத்திற்கு தேவையான உள்ளீடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றதனை இவ்விடத்தில் நல்ல செய்தியாக பதிவு செய்து இதுபோன்ற இன்னும் பல நிறுவனங்கள் உருவாக வேண்டும். அவற்றுக்கு நிச்சயமாக எமது தொழில்நுட்ப ஆலோசனைகள் கிடைக்கும் என்பதனையும் உறுதி செய்கினறேன்.

வடபுலத்து விவசாய அபிவிருத்தியில் அசேதன இரசாயனங்களின் ஆதிக்கம் பலமடங்காகும். வகைதொகையின்றி நாம் அசேதன இரசாயனங்களை பசளைகளாக

றின் ஆளுமையைக் கட்டுப்படுத்துவதற்கான எந்தவித பொறிமுறையும் எம்மிடத்தே இல்லாதிருப்பதுவும் இதற்கான முக்கியமான காரணங்களாகும். வடபுலத்து விவசாயத்தினை செறிவான பயிர்ச்செய்கையாக [Intensive Agriculture] மையப்படுத்தி பணப்பயிர்களை உற்பத்தி செய்வதனால் அசேதன விவசாய இரசாயனங்களின் பயன்பாடு அவசியமானதாக ஆக்கப்பட்டுள்ளது.

இது ஒரு துர்ப்பாக்கிய நிலைமையாகும். இங்குள்ள சனத்தொகையை கணக்கிட்டுப் பார்த்தால் வடபுலத்து உணவுற்பத்தியை எமது தேவைக்கேற்றதாக மாற்றியமைக்க முடியும். அதற்காக பாரியளவில் அசேதன

# இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கடல் எல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது

## ராஜித சேனாரட்ன கூறுகின்றார்

இலங்கை கடற்பரப்பிற்குள் தமிழக மீனவர்களுக்கு பாரம்பரிய கடல் பிரதேசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என கடற்றொழில் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

1974 இல் இலங்கை சர்வதேச கடல் எல்லை உடன்படிக்கையில் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை கடல் எல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும், தமிழக மீனவர்கள் தமது பாரம்பரிய கடற்றொழில் பிரதேசம் என்று கூறி இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைகின்றனர்.

இதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது என்று குறிப்பிட்ட அமைச்சர் எதிர்வரும் 25ஆம் திகதி பேச்சுவார்த்தை நடப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில் கைதாகியுள்ள தமிழக மீனவர்கள் அவர்களது வள்ளங்களுடன் விடுதலை செய்யுமாறு இந்திய அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க வள்ளங்களுடன் விடுதலை செய்தோம்.

ஆனால் இனிமேலும் அவர்கள் வருவதாக இருந்தால் வள்ளங்களை ஒப்படைப்பதில்லை என்ற முடிவை எடுத்திருப்பதாகவும் நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தையின் போது இந்த விடயம் திட்டவட்டமாக அறிவிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக இந்திய மத்திய அரசுக்கும் அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (2)





சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் கீழுள்ள பருத்தித்துறை முதலாம் ஒழுங்கை புனரமைப்பிற்கான அடிக்கல் அண்மையில் நாட்டப்பட்டது. இதன்போது மன்ற உறுப்பினர்கள் அ.பர்லமயூ ரன், ஞா. கிசோர் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டியபோது...
(படம்: சாவகச்சேரி செய்தியாளர்)

# இலங்கை - இந்திய மீனவர்கள் விவகாரம் இராஜதந்திர ரீதியில் அணுகப்படவேண்டும்

## ஜகத் ஜயசூரிய தெரிவிப்பு

இந்திய இலங்கை மீனவர்கள் அத்துமீறல்களில் ஈடுபடும் விவகாரம் இராஜதந்திர ரீதியில் அணுகப்பட வேண்டுமென கூட்டுப் படைகளின் கட்டளைத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

வன்முறைகளோ அல்லது திட்டமிட்ட குற்றச் செயல்களோ இடம்பெற அனுமதியளிக்கக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தோனேஷியாவில் நடைபெற்ற கடற் பாதுகாப்பு குறித்த மாநாடு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், மனிதாபிமான காரணிகளையும் கருத்திற் கொண்டு இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதன் மூலம் பிரச்சினைக்கு சுமுகமான முறையில் தீர்வுகாண முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இரு தரப்பு புரிந்துணர்வு அடிப்படை யிலேயே இலங்கை இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்திய மீனவர்களின் அத்து மீறல்கள் தொடர்பிலான தகவல்கள் இந்திய அதிகாரிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாக ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்டத்தில் பார்த்தீனியம் அதிக அளவில் பெருகியுள்ள அச்செழுப் பகுதியில் வடமாகாண சபையின் விவசாய அமைச்சின் பார்த்தீனியம் ஒழிப்புப் படையினர் பார்த்தீனியம் அழிப்பில் ஈடுபடுவதை படத்தில் காணலாம். (படம்:-எஸ்.ஆர்.கரன், மானிப்பாய் செய்தியாளர்)

## இலங்கையை விசாரணை செய்யும் அதிகாரம் ஐ.நா.ஆணையாளருக்கு இல்லை

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு இருக்கும் அதிகாரங்கள் சம்பந்தமாக ஜெனீவா மனித உரிமை பேரவையில் யோசனை ஒன்றை கொண்டு வர வேண்டும் என சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை சம்பந்தமாகவோ அல்லது வேறு ஒரு நாடு சம்பந்தமாகவோ விசாரணைகளை நடத்தும் உரிமை ஐ.நா மனிதவுரிமை ஆணையாளருக்கு கிடையாது.

அப்படியான அதிகாரங்கள் அவருக்கு வழங்கப்படவில்லை. அமெரிக்கா இந்த அதிகாரத்தை அவருக்கு வழங்க முயற்சித்து வருகிறது.

இதனால் அவருக்கு இருக்கும் அதிகாரங்கள் தொடர்பில் யோசனை ஒன்றை கொண்டு அதனை வெற்றி பெற செய்வதற்கான வேலைத்திட்டம் ஒன்றை இலங்கை முன்னெடுக்க வேண்டும்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைத்துள்ள பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும், ஆணையாளரின் அதிகாரங்கள் தொடர்பில் யோசனையை நிறைவேற்றிக் கொண்டால், அமெரிக்க பிரேரணையினால் ஏற்படப் போகும் தாக்கங்களை குறைக்க முடியும்.

நவநீதம்பிள்ளையை மனித உரிமை பேரவையின் ஆணையாளராக நியமித்துள்ளதே பிரச்சினைக்குரிய விடயம்.

அவர் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை சுமத்தியவர், அப்படியான ஒருவரை அந்த பதவிக்கு நியமித்துள்ளமை நியாயமானதல்ல என்றார். (2)

## ஜெனீவா பிரேரணை நிறைவேறினால் இலங்கையின் எதிர்காலம் வீழ்ச்சி காணும்

இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள ஜெனீவா யோசனை தொடர்பில் இலங்கை இளம் வர்த்தக நிறுவக அமைப்பு (சி.ஓ.வை.எல்.இ.) அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த யோசனை இலங்கையின் பொருளாதாரத்தை உடனடியாகவும் அதேவேளை நீண்ட காலத்திலும் பாதிக்கும் என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை 30 வருட போரின் பின்னர் பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டு வருகிறது.

இந்நிலையில் இலங்கை தற்போதுள்ள மிகமுக்கியமான வரலாற்று தடத்தில் இருந்து தாம் இந்தக் கோரிக்கை தொடர்பில் எழுதுவதாக இலங்கை இளம வர்த்தக நிறுவகம் குறிப்பிட்டுள்ளது.

அதில்,ஜெனீவாவில் யோசனை நிறைவேற்றப்பட்டால் அது இலங்கையின் சமாதானம் மற்றும் சகவாழ்வுக்கு பாதிப்பாக அமையும். அத்துடன் இலங்கையின் எதிர்காலத்தை பாதிக்கும் என்று அமைப்பின் தலைவர் சஞ்சீவ ஜெயரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் மூலம் பல்வேறு நல்லெண்ணத் திடடங்களை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2)

## ரவூப் ஹக்கீம் தோல்வி எனும் குப்பைக் கூடையில் வீழ்ந்துள்ளார்

### ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

**(கொழும்பு) ஐக்கிய தேசியக் கட்சியின் முஸ்லிம் வாக்கு வங்கியை உறுதிப்படுத்த, பதவிகளையும் சிறப்புரிமைகளையும் பாதுகாத்து கொள்ளும் நோக்கில் அடிக்கடி அணி மாறும் ரவூப் ஹக்கீம் போன்றவர்கள் அவசியமில்லை என அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு மற்றும் கட்சி பற்றி சிந்தித்து செயற்படும் நேர்மையான முஸ்லிம் தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனால் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டணியில் சேர்க்க வேண்டாம் என செயற்குழுவில் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சியாளர்களை தீர்மானிக்கும் சக்தி என்ற பெயரை பெற்றிருந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம், தோல்வி என்ற குப்பைக் கூடையில் விழுந்துள்ளார்.

அமைச்சர் ஹக்கீம் கழுத்தில் கல்லை கட்டிக் கொண்டு கிணற்றில் குதிப்பதையே தற்போது மேற்கொள்ள வேண்டும.

முஸ்லிம் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது, ஐக்கிய தேசியக் கட்சியே அதற்கு எதிராக குரல் கொடுத்தது. அமைச்சர் ஹக்கீமோ அவரது சகாக்களோ எதிராக குரல் எழுப்பவில்லை.

அமைச்சர் ஹக்கீமுக்கோ, ஆளும் கூட்டணியில் ஏனைய தலைவர்களுக்கோ வெட்கம் என்பது சிறிதளவிலும் இல்லை.

பதவி மற்றும் சிறப்புரிமைகளை பாதுகாத்து கொள்ளும் தேவை மட்டுமே இவர்களுக்கு உள்ளது என்றார். (2)

## கென்யாவிற்கு இலங்கை தூதுவர் நியமனம்

கென்யாவுக்கான இலங்கையின் தூதுவராக வடிவேல் கிருஷ்ண மூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தற்போது சவுதி அரேபியாவுக்கான இலங்கையின் தூதுவராக பணியாற்றி வருகிறார்.

சவுதி அரேபியாவுக்கான புதிய தூதுவராக கொழும்பு மாநகர முன்னாள் மேயர் மொஹமட் ஹுசைன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து தகவல் வெளியிட்டுள்ள சவுதி அரேபியாவுக்கான தூதுவர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தி, கென்யாவுக்கு தான் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் நாட்களில் கென்யாவுக்கு புறப்பட்டுச் செல்ல உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சுமார் ஒரு வருட காலம் சவுதிக்கான இலங்கையின் தூதுவராக பணியாற்றியுள்ள கிருஷ்ணமூரத்தி, அங்குள்ள இலங்கை பிரஜைகளுக்காக பாரிய சேவைகளை செய்துள்ளதால், இலங்கையர்களின் ஆதரவை பெற்ற திறமையான இராஜதந்திர அதிகாரியாவார். (2)

## அஸ்வர் எம்.பி. பாராளுமன்ற சபா பீடத்தில் அமர்ந்தமைக்கு எதிர்க்கட்சியினர் கோஷம்

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் சபைக்குத் தலைமை தாங்கும் வகையில் சபாபீடத்தில் அமர்ந்தமைக்கு பிரதான எதிர்க்கட்சியான் ஐக்கிய தேசியக் கட்சி கடும் எதிர்ப்பினை வெளியிட்டு ஆசனத்திலிருந்து இறங்கிச்செல்லுமாறு தொடர்ச்சியாக கோஷம் எழுப்பியதில் பாராளுமன்றம் பாரிய அமளிதுமளிக்குள்ளானது.

சபாபீடத்தை சுற்றி நின்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அஜித் பி.பெரேரா சுஜீவ சேனசிங்க அஜித் மன்னப்பெரும உள்ளிட்ட எம்.பி.க்கள் அஸ்வர் எம்.பியைப் பார்த்து இறங்கிச் செல்லுமாறு கோஷமெழுப்பி கூட சத்தமிட்டதையடுத்து, இரு தரப்பு கூச்சலுக்கு மத்தியில் அஸ்வர் எம்.பி.அவ்விடத்தில் இருந்து இறங்கிச் சென்றார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் பிற்பகல் ஒரு மணிக்கு கூடியது.

சபை பிரதான நடவடிக்கைகளின் பின்னர் இடம்பெற்ற விவாதத்தின் போது இருந்த சபாநாயகர் சபைக்கு தலைமை தாங்குமாறு அஸ்வர் எம்.பிக்கு அழைப்பு விடுத்தார்.

அஸ்வர் எம்.பி. சபாபீடத்தில் அமர்ந்த ஏக காலத்தில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய ஐக்கிய தேசியக் கட்சியின் எரான் விக்கிரமரட்ண எம்.பி. அஸ்வர் எம்.பியின் சில செயற்பாடுகள் காரணமாக சபாநாயகருடன் ஐ.தே. க. கலந்துரையாடியதன் பேரில் அவர் சபைக்கு தலைமை தாங்கும் பொறுப்பிலிருந்து நிறுத்தப்படுவதாக தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் இப்படி இருக்கும் போது தற்போது அவர் சபைக்கு தலைமை தாங்குவதை ஏற்கமுடியாது என எதிர்ப்பினை வெளியிட்டார்.

இதே காரணத்தை அக்கட்சியின் அஜித் பி.பெரேரா மற்றும் சுஜீவ சேனசிங்க ஆகிய எம்.பிக்களும் முன்வைத்து தமது எதிர்ப்பையும் அதிருப்தியினையும் வெளியிட்டனர்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த அஸ்வர் எம்.பி. தான் சபாநாயகராலேயே சபா பீடத்துக்கு தலைமை தாங்குவதற்கு அழைக்கப்பட்டேன். எனவே உங்கள் வாதத்தை ஏற்க முடியாது எனக் கூறினார்.

எனினும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறி ஐ.தே.க. எம்.பிக்கள் கூச்சலிட்டனர்.

இதேவேளை எதிர்க்கட்சியினரின் கூச்சல் மற்றும் எதிர்ப்புக்கு மத்தியில் ஆளும் கட்சியினரும் பதிலுக்கு கூச்சலிட்டனர். இதன் போது அஸ்வர் எம்.பியை சபாபீடத்திலிருந்து இறங்குமாறு தொடர்ந்து கூச்சலுடன் வலியுறுத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

இதன் போது எழுந்த ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைசசர் தினேஷ் குணவர்தன சபாநாயகரின் அழைப்பின் பேரிலேயே அஸ்வர் குறித்த பீடத்திற்கு சென்றுள்ளார்.

ஐ.தே.க. பழைய கதைகளையே கூறுகின்றது. எனவே சபாநாயகரின் தீர்மானத்தை கவனத்திற்குட்படுத்த முடியாது என்றார்.

இந்த சந்தர்ப்பத்திலும் கூச்சலும் குழப்பமும் வெகுவாக அதிகரித்திருந்தது.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறுகையில்,

அஸ்வர் எம்.பி.எமது பாராளுமன்றத்தினதும் பிரித்தானியப் பாராளுமன்ற முறையினதும் சம்பிரதாயங்களை நன்கு அறிந்தவராவார்.

மேலும் சபாபீடத்திற்கு தலைமை தாங்கும் உறுப்பினர்களின் பெயர்கள் பட்டியலிடும் போது அது குறித்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஐ.தே.க. எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

இந்நிலையில் இப்போது எதிர்ப்பது ஏற்கக்கூடியதல்ல எனக் கூறினார்.

அஸ்வர் எம்.பி. சபாபீடத்திலிருந்து இறங்கிச் சென்றதையடுத்து ஐ.தே.க. எம்.பிக்கள் கைகளைத் தட்டியும் மேசைகளைத் தட்டியும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதுடன் கோசம் கூச்சல்களையும் நிறுத்திக் கொண்டனர்.

இதனையடுத்து பேசிய ஜனநாயக தேசியக் கட்சி எம்.பியான விஜித ஹேரத் கூறுகையில்,

பொருத்தமில்லாதவர்கள் மீது சபைக்கு தலைமை தாங்கும் பொறுப்பில் அமர்த்தினால் இவ்வாறான நிலை தான் உருவாகும் என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடுகளில் அகதி அந்தஸ்து கோர முடியாதவாறு சட்டம் இயற்றப்படும்

### விரைவில் என்கிறார் டிலான் பெரேரா

(கொழும்பு)

தமிழர்கள் வெளிநாடுகளில் அகதி அந்தஸ்து கோர முடியாத வாறு இலங்கையில் சட்டம் ஒன்று விரைவில் நிறைவேற்றப்படவுள் ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அபிவிருத்தி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு இந்தத் தகவலை வெளி யிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு.

இலங்கையில் இருந்து வெளி நாடுகளுக்கு செல்கின்ற ஈழத் தமிழர்கள் அந்த நாடுகளிலேயே அரசியல் தஞ்சத்தை கோருகின்ற னர்.

இதற்காக அவர்கள் போலியான தகவல்களை வழங்குகின்றனர்.

எனினும் அவர்கள் போலியான தகவல்களை வழங்கியுள்ளமை உறுதியானதன் பின்னர், அந்த நாடுகள் அவர்களை நாடுகடத்து கின்றன.

இந்த நிலையில் அவ்வாறான நாடுகளின் கோரிக்கையின் அடிப் படையில் இந்த தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரி வித்துள்ளார்.

தற்போது இது தொடர்பான சட்ட மூலம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருவ தாகவும், அது விரைவில் நாடாளு மன்றத்தில் முன்வைக்கபபடவுள்ள தாகவும் அவர் மேலும் கூறியுள் ளார். (2)


## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி நடேசன் சறோஜினி

நல்லூரைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசன் சறோஜினி கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு 3 Rue, Belgrand 750 20, Paris Metro Gambetta, France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### இராமலிங்கம் நாகநாதன்

சாவகச்சேரியைப் பிறப்பிட மாகவும் பிரித்தானியா Milton Keynes ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் நாகநா தன் கடந்த 19 ஆம் திகதி புதன் கிழமை அன்று கால மானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வ ரும் 30 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணிக்கு York House Centre ,London Rd, Stony Stratford, Milton Keynes, Bucking hamshire MK11 1JQ, United King dom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### மத்தியாஸ் சூசைதாஸ்

மயிலிட்டியைப் பிறப்பிடமா கவும் மணற்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட மத்தி யாஸ் சூசைதாஸ் (சமாதான நீதவான்) நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி பூசை இன்று காலை 9 மணிக்கு மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் மணற்காடு சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

# கிழக்கு மாகாணத்தின் கல்விபுலம் சிங்கள மயப்படுத்தப்படுகிறது

## ஆசிரியர்கள் சங்கங்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தின் கல்விப் புலம் சிங்கள மயப்படுத்தப்படுவ தாக இலங்கை தமிழாசிரியர் சங்க மும் இலங்கை ஆசிரியர் சங்கமும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் தமிழாசிரியர் சங்கத்தின் தலைவர், பொதுச் செய லாளர் ஆகியோரினால் விடுக்கப் பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் பாடசாலைகள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுவதோடு இங்கு கடமையாற்றுகின்ற அதிபர், ஆசிரி யர்களும் பழிவாங்கப்படுகின்றனர்.

அத்தோடு அடக்குமுறை நிர் வாகமே அமுலில் இருப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டி வன்மையாகக் கண்டிக் கின்றது.

கிழக்கு மாகாணக் கல்வி அமைச் சில் கடமையாற்றிய தமிழ் உயர் அதிகாரிகளை திட்டமிட்டு வெளி யேற்றி பெரும்பான்மை இனம் சார்ந்த அதிகாரிகளே முற்று முழு தாகக் கடமையாற்றுகின்றார்கள். கல்வி அமைச்சுச் செயலாளர், உத விச் செயலாளரில் ஒருவர், நிர்வாக உத்தியோகத்தர், பிரதம எழுது வினை ஞர், கல்விக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளர், மேலதிக உதவிக் கல்விப் பணிப்பாளர் அனைவருமே பெரும்பான்மை இனம் சார்ந்தவர் களாக இருக்கின்றனர்.

இதனால் பெருமளவிலான தமிழ்ப் பாடசாலைகளின் அதிபர் கள், ஆசிரியர்களின் தேவைகள் புறக்கணிக்கப்படுவதோடு, தமிழ் பாடசாலைகளும் புறக்கணிக்கப்படு கின்றன.

அத்தோடு அடக்குமுறைப்பாணி யில் அதிபர்களும் ஆசிரியர்களும் துன்புறுத்தப்படுகின்றனர்.

இது தவிர பாடசாலைகளில் அதி பர்கள் நியமனம், கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் நியமனம், கோட்டக்கல்விப் பணிப்பாளர்களின் நியமனம் உள்ளிட்ட அனைத்திலும் திட்டமிட்ட பழிவாங்கல்களும் புறக் கணிப்புகளும் இடம் பெறுள்ளமை ஆதாரங்களுடன் நிருபணமாகியி ருக்கின்றன.

இந்நிலையில் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திலும் இது போன்ற முன்னெடுப்புகள் ஆரம் பித்திருப்பதும் இது இனரீதியிலான ஒடுக்குமுறைக்கு ஒப்பானது என் பதும் வெளிப்படையாகவே தெட்டத் தெளிவாகின்றது.

மீண்டும் இனக்குரோதங்களைத் தூண்டுகின்ற செயற்பாடுகளாகவே இதனை நாம் பார்க்கிறோம்.

இவ்வாறான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதோடு இது தொடர்பில் ஜனாதிபதி தலையீடு செய்து நிவர்த்திக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் பேசும் உயர் அதிகாரிக ளின் பொறுப்புக்களைப் பறித் தெடு த்து தமிழ் பாடசாலைகளுக்கு எது வுமே செய்யவிடாமல் தடுத்து அர சியல் ரீதியிலான செல்வாக்கு களை மாகாணக் கல்விப்பணிப்பா ளர் பிரயோகிப்பது அவரது பதவிக் குரிய காரியமல்ல. ஏற்கனவே இது போன்ற காரியங்களில் அவர் ஈடுபட்டு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவியில் இருந்து இடை நிறுத் தப்பட்டமையையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

பொருத்தமில்லாத ஏராளமான படிவங்களை பாடசாலைகளுக்கு அனுப்பி அதிபர்களுக்கும் ஆசிரி யர்களுக்கும் சுமைக்ளைக் கூட்டி மாகாணக் கல்வித் திணைக்களம் செய்யவேண்டிய வேலைகளை பாட சாலைகளில் சுமத்துவது பொருத்த மில்லாதது.

இதைவிட மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு வருகின்ற அதி பர்கள், ஆசிரியர்களுக்கு பதில் கூறும் அளவுக்கு பொறுப்பு வாய்ந்த எவரும் கடமையில் இல்லாதிருப் பதும் மாகாணக் கல்வித்திணைக் களத்தின் அசமந்தப் போக்குகளை வெளிப்படுத்துகின்றது.

இதைவிட இடமாற்ற சபை குடி தீர்மானிக்கப்பட்ட அதிபர்கள், ஆசி ரியர்களின் இடமாற்றங்களையும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் இடைநிறுத்தியிருப்பது அடக்கு முறையின் இன்னுமொரு வெளிப் பாடு.

அதிபர்கள், ஆசிரியர்களுக்கு அவசியமில்லாத படிவங்களைக் கொடுத்து அதில் அவசியமில்லாத கேள்விகளைக் கேட்டு மாகாணக் கல்விப் பணிப்பாளர் மறைமுகத் திட்டமொன்றைத் தீட்டுவது அம்பல மாகியுள்ளது.

இது தமிழ்பேசும் அதிபர்கள், ஆசிரியர்களை ஓரங்கட்டி தமிழ் பிள்ளைகளின் கல்வியை அழிக் கும் திட்டம் என்றே நாம் கருதுகின் றோம். இதனை ஒரு போதும் ஏற் றுக் கொள்ள முடியாது.

பெரும்பான்மையான தமிழ்ப் பாடசாலைகளைக் கொண்ட கிழக்கு மாகாணத்தில் இவ்வாறானதொரு அடக்கு முறையைப் பிரயோகிப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என் பதனை புரிந்து கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

இதனை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாணக் கிளை யும் வன்மையாகக் கண்டித்துள்ள தாக மாகாணச் செயலாளர் சி.ஜெய ராஜா தெரிவித்துள்ளார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

## மஹிந்தவின் வசிய யந்திரம் நாமல் ராஜபக்ஷவின் கையில்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முக்கியமான இடங்களுக்கு செல் லும் போது மாந்திரீக வசிய யந் திரத்தை எடுத்துச் செல்வது வழக் கம்.

ஜனாதிபதி எடுத்துச் செல்லும் அந்த வசிய யந்திரத்தை தற்போது அவரது மகன் நாமல் ராஜபக்ஷ கையில் வைத்துள்ளார்.

நுகேகொடை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரை யாற்றும் போது நாமல் ராஜபக்ஷ அந்த வசிய யந்திரத்தை கையில் வைத்திருந்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடனான சந்திப்புகள், சர்வதேச ஊடகங்க ளின் நேர்காணல்கள் மற்றும் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டம் உட் பட சர்வதேச கூட்டங் களில் உரையாற்றும் போது இந்த வசிய யந் திரத்தை தன் கையில் வைத்திருப்பது வழக் கம்.



தன்னை சந்திக் கும் நபர்களை வசி யப்படுத்துவதற்காகவே ஜனாதிபதி இந்த வசிய யந்திரத்தை கையில் வைத் திருக்கும் பழக் கத்தை கொண்டிருப் பதாக பரவலாக பேசப் பட்டு வருகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சோதிடம் மற்றும் மலையாள மாந்திரீகம் ஆகியவற்றின் மீது கடும் நம்பிக்கை கொண்டவர் எனக் கூறப்படுகிறது.

ஜனாதிபதி தனது கழுத்தில் 10க்கும் மேற்பட்ட சிறிய மாந்திரீக யந்திரங்களை அணிந்திருப்பது வழக்கம் எனவும் அலரி மாளிகை யின் தகவல்கள் தெரிவிக்கின் றன. (2)

## மாங்குளம் வர்த்தக நிலையங்களில் புகையிலை சார்ந்த பொருட்கள் விற்கத்தடை

மாங்குளம் பொதுச்சுகாதார பிரி விற்குட்பட்ட வர்த்தக நிலையங்க ளில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமை யும், விடுமுறை தினங்களிலும் புகைத்தல் மற்றும் புகையிலை சார்ந்த பொருட்களை விற்பனை செய்வதற்கு தடைவிதித்துள்ளதாக மாங்குளம், கறிப்பட்டமுறிப்பு வர்த்த கசங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி வியாழக் கிழமை முதல் மேற்படி நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சமூக மட்டத்திலிருந்து புகைத் தலை தடைசெய்யும் பொருட்டும் மக்களின் சுகாதாரத்தைக் கடை பிடிக்கும் நோக்கோடு இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இப்பிரதேசத்தில் முற்றாக புகைத்தலை ஒழிப்பதற் கான நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளதாக சங்கத்தினர் தெரிவித் துள்ளனர். (2-9-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்க்கப்பல்களை இந்திய கடற்பரப்பிற்குள் அனுமதிக்கவேண்டும்

***சீனாவின் வேண்டுகோளை இந்தியா நிராகரிப்பு***

(புதுடில்லி)

இந்திய கடற்பரப்புக்குள் காணாமற்போன விமானத்தை தேடும் பணிக்காக போர் கப்பல்களை அனு மதிக்க வேண்டும் என்ற சீனாவின் வேண்டுகோளை இந்தியா நிராகரித்தது.

239 பேருடன் மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீன தலைநகர் பீஜிங் நோக்கி பறந்த மலேசிய விமானம் கடந்த 8 ஆம் திகதி அதிகாலை தெற்கு சீனக் கடலுக்கு மேலே பறந்து கொண்டிருந்த போது. திடீரென விமானக்கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது.

இதையடுத்து அந்த விமானத்தை தேடிக்கண்டுபிடிக்கும் முயற்சியில் 26 நாடுகள் ஈடுபட்டு வருகின்றன. விமானம் மாயமாகி 2 வாரங்களை எட்டியும். அதுதொடர்பாக உறுதியான எந்த தகவலும் கிடைக்கவில்லை

இந்த நிலையில். இந்திய கடற்பரப்பில் விமானத்தை தேடும் பணிக்காக அந்தமான் கடல் பகுதியில். தங்கள் நாட்டு போர்கப்பல்கள் மற்றும் மீட்பு கப்பலகளை அனுமதிக்கவேண்டும் என சீனா இந்தியாவிடம் வேண்டுகோள்விடுத்தது.

ஆனால். அந்த பகுதியில் இந்திய கடற்படை ஏற்கனவே தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளதால் சீனா கடற்படை அனுமதிக்க முடியாது என்று இந்தியா தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

சீனாவில் போர்க் கப்பல்கள அனுமதி கேட்டது தொடர்பாக. பாதுகாப்பு படை தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது. வங்காள விரிகுடா கடறபகுதியில் இந்திய இராணுவத்துக்கு சொந்தமான பகுதியில். குறிப்பாக சீனா படைகள் ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்க பாதுகாப்பு பணியில் இந்திய படைகள் ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில். சீன போர்க்கப்பல்களை அனுமதித்தால் அது ஆபத்தை விளைவிக்கும் என்று தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. (2)



*ரஷ்யாவிற்கு விஜயம் மேற்கொண்ட ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன், மொஸ்கோ, கிரிம்ளின் மாளிகையில் ஜனாதிபதி புடினை சந்தித்து கைலாகு கொடுத்ததைப் படத்தில் காணலாம்.*

## 11 பேருக்கு சிறைத்தண்டனை

(கெய்ரோ)

எகிப்தில் போராட்டம் செய்த 17 பேருக்கு ஓராண்டு கடந்த நிலையில் எகிப்திய நீதிமன்றம் 14 ஆண்டு கால சிறைத் தண்டனை விதித்துள்ளது.

எகிப்து நாட்டை முப்பதாண்டுகளுக்கும் மேலாக ஆண்டுவந்த சர்வாதிகாரி ஹோஸ்னி முபாரக்கை கடந்த 2011 ஆம் ஆண்டில் இஸ்லாமிய சகோதரத்துவ இயக்கத்தினரின் துணையுடன் வீழ்த்திய முகமது மோர்சி ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றினார்.

அவருக்குத் துணை புரிந்த இஸ்லாமிய இயக்கத்தின் பல தலைவர்களும் சிறையில் அடைக்கப்பட்டு விசாரணையை எதிர்நோக்கியுள்ளனர்.

ஜனாதிபதி முகமது மோர்சிக்கு எதிரான கலவரங்கள் பரவத் தொடங்கிய சமயத்தில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தலைநகர் கெய்ரோவில் உள்ள அல்-அசார் பல்கலைக்கழகத்தில் விஷம் கலந்த உணவை உட்கொண்டதால் ஏராளமான மாணவர்கள் பாதிக்கப்பட்டனர்.

12 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்டவர்கள் இஸ்லாமிய சகோதரத்துவ ஆதரவாளர்கள் என்பதால் இந்த சம்பவத்திற்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.

ஆனால் எகிப்திய பாது காப்புப் படைகளோ மோர்சி யின் பதவி இறக்கத்திற்குப் பின் நூற்றுக்கணக்கான இஸ் லாமிய இயக்கத்தினரைக் கொன்றும் ஆயிரக்கணக்கானவர்களைக் கைது செய்து சிறையிலும் அடைத்தனர்.

பல்கலைக்கழக சம்பவம் நடந்து ஓராண்டு கழிந்த நிலையில் எகிப்திய நீதிமன்றம் நேற்று முன்தினம் இந்த வழக்கிற்கான தீர்ப்பை வழங்கியுள்ளது.

இதில் எதிர்ப்புகள் மற்றும் பொது கட்டங்கள் ஆக்கிரமிப்பு குற்றச்சாட்டின்கீழ் 17 பேருக்கு 14 ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (2)

## ரஷ்யாமீது பொருளாதார தடையை அமுல்படுத்த ஐரோப்பிய நாடுகள் திட்டம்

(கீவ்)

உக்ரைன் நாட்டிலிருந்து பிரித்து. கிரிமியாவை. தங்கள் நாட்டுடன் இணைத்து கொண்ட ரஷ்யா மீது. பொருளாதார தடையை அமுல்படுத்த. ஐரோப்பிய நாடுகள் திட்டமிட்டுள்ளன.

சோவியத் யூனியன் உடைந்த பின். அதில் இடம் பெற்றிருந்த உக்ரைன். தனி நாடானது. பொருளாதாரத்தில் பின்தங்கியிருந்த உக்ரைனை. ஐரோப்பிய யூனியனுடன் இணைக்க. மக்கள் போராட்டம் நடத்தினர்.

உக்ரைனிலிருந்து தனியாக பிரிப்பது குறித்து. மக்களிடம் கருத்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. கிரிமியாவை. ரஷ்யாவுடன் இணைக்க. அப்பகுதி மக்கள் ஆதரவளித்துள்ளனர். இதையடுத்து. கிரிமியா. ரஷ்யாவின் ஒருங்கிணைந்த பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம். மொஸ்கோவில். ரஷ்ய ஜனாதிபதி புடின் முன்னிலையில், கையெழுத்தானது.

இதை. அமெரிக்கா தலைமையில். ஐரோப்பிய யூனியன நாடுகள் கடுமையாக எதிர்த்துள்ளன. ரஷ்யா மீது. பொருளாதார தடை விதிக்க. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் திட்டமிட்டுள்ளன.

இந்நிலையில், கிரிமியாவின் ஒரு பகுதியில் உள்ள. உக்ரைன் நாட்டு கடற்படை தளத்தின் மீது. ரஷ்ய ஆதரவு படைகள். நேற்று. திடீர் தாக்குதல் நடத்தின. இதில். உக்ரைன் வீரர். ஒருவர் உயிரிழந்தார் .அங்கிருந்த தளபதியை. ரஷ்யா கைது செய்தது. இதற்கு உக்ரைன் அரசும். அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் கண்டனம் தெரிவித்தன.

நிலைமை மோசமானதால். ஐ.நா. பொது செயலர். பான் கீ மூன். கிரிமியா வந்துள்ளார். ரஷ்யாவுடன் இணைய ஆதரவு தெரிவித்த கிரிமியா நிறுவனங்கள் மீது. ஐரோப்பிய யூனியன். ஏற்கனவே பொருளாதார தடை விதித்துள்ளது.

இந்நிலையில். உக்ரைனிலிருந்து வலுக் கட்டாயமாக. பிரித்து கிரிமியாவை தங்கள நாட்டுடன் இணைத்து கொண்ட. ரஷ்யா மீது பொருளாதார தடை விதிக்க. ஐரோப்பிய நாடுகள் முடிவு செய்துள்ளன.

எதிர்வரும். ஜூன் மாதம. ரஷ்யாவின் சோச்சி நகரில். ஜி8 நாடுகளின் உச்சி மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டை முற்றிலுமாக புறக்கணித்துள்ளதாக. ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் நாட்டிலிருந்து கிரிமியா பிரிக்கப்பட்டு விட்டதால், அங்கு பணியில் உள்ள பாதுகாவலர்கள் உள்ளிட்டவர்களை. உக்ரைன் பகுதிக்கு மாற்றம் செய்வது குறித்து. ஐ.நா. பொது செயலர். பான் கீ மூன். உக்ரைன் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த உள்ளார்.

இது குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கருத்து வெளியிடுகையில்.

ரஷ்யாவின் மீது உள்நாட்டு அடிப்படையிலும் வெளிநாட்டு அடிப்படையிலும் பல பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. ரஷ்யாவின் முக்கிய துறைகள் மீது இன்னும் சில தடைகள் விதிக்கப்பட உள்ளன.

மேலும் இப்பொருளாதார தடைகளால்ரஷ்யாவின் பொருளாதாரம் பெரிதும் பாதிப்படும என்று தெரிவித்தார். (2)

## உக்ரைனின் போர்க்கப்பல்கள் மூன்று கிரிமியா படைகள் வசம்



(கிரிமீயா)

உக்ரைனின் மூன்று போர்க்கப்பல்களை கிரிமீயா படைகள் கைப்பற்றினர்.

கிரிமீயாவில். உக்ரைனுக்கு சொந்தமான ஏராளமான இராணுவ நிலைகள் மற்றும் கடற்படை தளம் உள்ளது. இந்த நிலையை உக்ரைன் இராணுவ வீரர்கள் காவல் காத்து வருகின்றனர்.

சேவஸ்டோபோல் பகுதியில் கருங்கடலில் உள்ள உக்ரைன் நாட்டுக்கு சொந்தமான கடற்படை தள்த்தை கடந்த 19 ஆம் திகதி சுற்றிவளைத்த கிரிமீயா படையினர். அந்த தளத்தை கைப்பற்றி அதில் ரஷ்ய நாட்டின் கொடியை ஏற்றி வைத்தனர். அந்த தளத்தின் கடற்படை தளபதி உள்ளிட்ட வீரர்களையும் வெளியேற்றி அவர்களை கைது செய்தனர்.

இந்த தாக்குதல் நிகழ்ந்த சில மணி நேரத்தில் தலைநகர் சிம்பெரோபோலில் இருந்து சுமார் 30 கிலோ மீற்றர் துாரத்தில் உள்ள பக்சிசரேய் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உக்ரைன் நாட்டின் மற்றொரு கடற்படை தளத்தையும் கிரிமீயா படைகள் கைப்பற்றின.

இந்நிலையில். ரஷ்ய வீரர்களின் ஒத்துழைப்புடன் உக்ரைனின் 3 போர் கப்பல்களை கிரிமியா படைகள் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளன.

கிரிமீயாவில் உள்ள தங்களது இராணுவ நிலைகளின் மீது ரஷ்ய படையினர் இது போன்று அதிரடி தாக்குதல் நடத்தி வருவதற்கு உக்ரைன் பாதுகாப்பு மந்திரி லியோனிட் போர்ல்யகோவ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மற்றும் கிரிமீயா பகுதியில் நிலவி வரும் பதற்றத்தை அதிகரிக்கச் செய்யும் எவ்வித செயல்களிலும் ஈடுபடுவதில் இருந்து அனைத்து தரப்பினரும் விலகி இருக்க வேண்டும் என ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் அறிவுறுத்தியுள்ளார். (2)

## இந்தியாவும் சீனாவும் உறவினர்போன்று பழகவேண்டும்

சீன ஜனாதிபதி தெரிவிப்பு



(பீஜிங்)

இந்தியாவுக்கும் சீனாவுக்குமான உறவு பாரம்பரியமாக வரலாற்றிலேயே நிலைத்துள்ளது என சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங்க் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டுள்ள அவர் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அப்போது அவர் கூறுகையில்,

இந்தியாவுக்கும் சீனாவுக்குமான உறவு பாரம்பரியமாக வரலாற்றிலேயே நிலைத்துள்ளது. இரு நாடுகளும்உறவினர் போல பழகவேண்டும். நாடுகளுக்கிடையேயான நட்புறவு நீடிக்க வேண்டும்என சீன ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு நட்புறவு பரிமாற்றங்களுக்கிடையேயான ஆண்டாக அமையும் என்று தெரிவித்தார். மேலும இரு நாடுகளுக்கு இடையேயான நட்புறவை மேம்படுத்த முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இரு நாடுகளுக்குமிடையே விசா பெறுவதில் உள்ள சிக்கலகள் எளிமையாக மாற்றி அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.சீனாவுக்கான இந்திய வெளியுறவு தூதராக அசோக கந்தா சமீபத்தில் தான் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தன் மனச்சாட்சிக்கு ஒப்பான கடமையைச் செய்
> தாலும் சூழ்நிலையை அனுசரித்து செய்.
> அது சிறந்து விளங்கும் - யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அதிகாரக் கதிரையில் தமிழனும் தமிழனும் இருந்தால்...

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

வடக்கின் முதல்வருக்கு எதிராக அவர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உச்ச நீதிமன்றமே இறுதி முடிவெடுக்கவேண்டும் என்பதால் அது பற்றி நாம் இங்கு பிரஸ்தாபிக்க விரும்பவில்லை.

நாம் இங்கு கூறுவதெல்லாம் இரண்டு தமிழர்கள் உயர்ந்த அதிகாரங்களில் இருந்தால் நிலைமை எப்படியாக அமையும் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகவே வடக்கின் முதல்வருக்கு எதிராக வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கை இங்கு எடுத்துக் கொண்டோம்.

வடக்கு மாகாண அரசு பதவி ஏற்றவுடன் வடக்கின் ஆளுநரை மாற்றவேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தது.

இந்தத் தீர்மானத்திற்கு வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரன் அவர்கள் எந்தளவு தூரம் ஆதரவு தெரிவித்தார் என்ற ஆராய்வுகளுக்கு அப்பால், வடக்கின் ஆளுநரை மாற்றவேண்டும் என்ற தீர்மானத்தை கொண்டுவருவது, வடக்கின் மாகாண சபைத் தேர்தலில் தாம் பெற்ற வெற்றிக்கு செய்கின்ற மடை பரப்பலாகக் கருதப்பட்டது.

இதன் காரணமாக விரும்பியோ விரும்பாமலோ ஆளுநரை மாற்றுதல் என்ற தீர்மானத்தை வடக்கின் முதல்வரும் ஆதரிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

எனினும் வடக்கின் ஆளுநரை மாற்ற முடியாமல் போக, ஆளுநரின் பத்தாமிடத்து வியாழன் மெல்ல நகர்ந்து வடக்கின் பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமியின் பக்கம் பார்க்கலாயிற்று.

இந்தப் பார்வை கிரந்தம் முற்றிப் பௌந்திரமாகியது போல வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாள்ரை மாற்றவேண்டும் என்ற தீர்மானமாக வலுவடைந்தது.

இராணுவ அதிகாரியாக இருந்த ஒருவரை ஆளுநராக வைத்துக் கொண்டு நாம் எதுவும் செய்ய முடியாது என்று குற்றஞ்சாட்டிய வடக்கு மாகாண அரசு,

இப்போது ஒரு தமிழராக இருக்கக் கூடிய பிரதம செயலாளரையும் மாற்ற வேண்டும் என்கிறது.

சிங்கள இனம் சார்ந்த ஆளுநரை எதிர்த்து தம்மால் எதுவும் செய்யமுடியாது என்று கூறுகின்ற வடக்கு மாகாண அரசு, ஒரு தமிழரான பிரதம செயலாளரால் எல்லாம் செய்யமுடியும் என்று நினைப்பது தவறான விடயமே.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கின் அரசால் எதுவும் செய்யமுடிவில்லை என்றால், அந்த நிலைமை தான் ஒவ்வொரு தமிழ் அதிகாரிக்கும் இருக்கும் என்பதை உள்ளார்ந்தமாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.

அதிலும்நாட்டில் இருக்கக்கூடிய அச்சமான சூழ்நிலையில் எந்த அதிகாரியும் மத்திய அரசின் கட்டளையை ஏற்றுக் கடமையைச் செய்வதே புத்திசாலித்தனம் என்று நினைப்பர்.

ஆக, பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமியின் இடத்தில் எந்தத் தமிழரை பிரதம செயலாளராக நியமித்தாலும் அவர் மத்திய அரசு மற்றும் ஆளுநரின் உத்தரவை நிறைவேற்றவே முற்படுவார் என்பதை உணர வேண்டும்.

இத்தகைய புரிந்துணர்வு இருந்திருந்தால் பிரதம செயலாளரை மாற்றவேண்டும் என்ற முடிவை வடக்கு மாகாண அரசு எடுத்திருக்க மாட்டாது.

அதேநேரம் வடக்கு மாகாண பிரதம செயலாளரும், வடக்கின் முதல்வருக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்தமை அவரின் அவசரமான முடிவாக அல்லது உயர்மட்ட அழுத்தத்தின் பணிவாக உள்ளதென்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

ஆக, இரண்டு தமிழர்கள் உயர் பதவியில் இருந்தும் தங்களுக்குள் பேசி, கருத்துப் பரிமாறி, நாங்கள் தமிழர் என்ற இனப்பற்றோடு செயற்படாமல் போனமை வேதனைக்குரியது.

என்ன செய்வது; உச்ச நீதிமன்றத்தில் இருந்து தீர்ப்பு வழங்கிய வடக்கின் முதல்வர் உச்ச நீதிமன்றில் தோன்றி விளக்கம் கூறுவதாக தலைவிதி இருந்தால், அதை யாரால்தான் தடுக்கமுடியும்?

## உதயசூரியன் கிராம மக்கள்
# காணி உறுதிகளை வழங்கக்கோரி
# தென்.பிரதேச செயலகம் முன் ஆர்ப்பாட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கச்சாய் வீதியிலுள்ள உதயசூரியன் கிராம மக்கள் தமக்கு காணி உறுதிகளைத் தருமாறு கோரி நேற்றுக்காலை தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி கிராமத்திலுள்ள 60 குடும்பங்கள் அரச காணிகளில் வாழ்ந்து வருகின்றன.

ஆயினும் இவர்களுக்கான காணி உறுதிகள் வழங்கப்படவில்லை.

இங்குள்ள மக்களின் அநேகமானோர் சாவகச்சேரி நகராட்சி சுகாதார தொழிலாளர்களாக கடமையாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் காணி உறுதிகள் இல்லாமையால் இவர்களுக்கான வீடுகளை நகராட்சி மன்றம் அமைத்துக் கொடுக்கவில்லை.

இதனால் இக் கிராம மக்கள் தமக்கு காணி உறுதிகளைத் தருமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு தென்மராட்சி பிரதேச செயலருக்கு மகஜரும் வழங்கியுள்ளனர்.

காணி உறுதிகளை வழங்குமாறு கோரியிருந்த மகஜருக்கு தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் கருத்து தெரிவிக்கையில்,

உதய சூரியன் கிராமம் கடற்கரையை அண்டியுள்ளது. எனவே கடற்கரைக்கு 200 மீற்றருக்கு அப்பால்தான் குடிவாழ முடியும்.

இவ்விடயம் பற்றி சம்பந்தப்பட்ட திணைக்களங்களோடு கதைக்க வேண்டுமென்றார்.

ஆயினும் சாவகச்சேரி நகராட்சி மன்றத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை காணி உறுதி வழங்குதல் தொடர்பில் கூறுகையில்,

பெருங்கடல் பகுதிகளில் குடியமர்வதற்குதான் 200 மீற்றர் தூரம் தேவையெனவும் இது கடல் நீரேரி என்றும் சுட்டிக் காட்டினர்.

ஆர்ப்பாட்டத்திற்கு வந்த சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரி குறித்த கிராம மக்களின் விபரங்களை கிராம சேவையாளர் ஊடாகப் பெற்று பிரதேச செயலகம் மற்றும் திணைக்களங்களூடாக கலந்தாலோசித்து காணி உறுதிகள் பெற்றுக் கொள்ளலாம் என உறுதியளித்துள்ளார். (2-9-29)

# யோகா பயிற்சியும் சிறப்புக் கருத்துரைகளும்

யாழ் யோக அரங்கத்தினரால் யோகா பயிற்சிநெறி இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் (நல்லூர்த் தேரடி அருகே) ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மருத்துவபீட உளநலத்துறையைச் சேர்ந்த திருமதி சாவித்திரி ரவிச்சந்திரன் ஆரோக்கிய வாழ்விற்கு யோக வழி முறைகள் எனும் தொனிப்பொருளில் மருத்துவ விஞ்ஞான விளக்கத்துடன் கூடிய சிறப்புக் கருத்துரையை வழங்குவார்.

யோகா பயிற்சி வகுப்புக்கள் தினமும் காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை தொடர்ந்து மூன்று மாதங்கள் நடை பெறும்.

அனுபவமுள்ள ஆசிரியரால் நுட்பமாகப் பயிற்சி வழங்கப்படுவதுடன் பெண்களுக்கான மேலதிக பயிற்சிகள் பெண் ஆசிரியரால் வழங்கப்படும். அத்தோடு கையேடுகளும் வழங்கப்படும்.

யோகாசன செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். எனவே ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து பயன்பெறலாம் என்று யாழ்யோக அரங்கத்தினர் அறிவித்துள்ளனர். (2-9)

## மும்மொழிக் கற்கை நேர்முகப் பரீட்சை

வட மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்படும் மும்மொழி கற்கை நெறியின் கீழ் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சைக்கான பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் இன்றைய தினம் நடைபெறவிருக்கும் நேர்முக பரீட்சைக்கான தெரிவானோரின் பெயர் பட்டியலை www.np.gov.lk இணையத்தளத்தில் பார்வையிடமுடியும்.

நேர்முக பரீட்சை காலை 9 மணிக்கு ஜி.பி.எஸ் டச்சுவீதி கல்வியங்காட்டில் அமைந்துள்ள மும்மொழி கற்கை பயிற்சி நிலைய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (செ)

## சர்வதேச மகளிர் தினம்

யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத்தினரால் சர்வதேச மகளிர் தினம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் திருமதி ருக்மணி ஆனந்தவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை செயலாளர் திருமதி வேதவல்லி செல்வறெட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2)


## சந்திரிகா குற்றச்சாட்டு ஜனாதிபதி மறுப்பு

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தொடர்பான தகவல்களை திரட்டுவதற்கு அரசாங்கம் ஒருபோதும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, சந்திரிகா குமாரதுங்கவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

தன்னுடைய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் தகவல் திரட்டி வருவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு பதில் கடிதம் அனுப்பியுள்ள ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, சந்திரிகாவின் தொலைபேசி உரையாடல்கள், மின்னஞ்சல் தகவல்கள் போன்று ஹொரகொல்ல மற்றும் கொழும்பில் அமைந்துள்ள சந்திரிகாவின் வீடுகள் தொடர்பான தகவல்கள் அரசாங்கத்தினால் ஒருபோதும் திரட்டப்படவில்லை என்றும், இது தொடர்பான குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் (செ-11)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



### உண்மையான அன்பு

நீங்கள் அனைவருமே அன்பைத்தேடி அலையும் பிச்சைக்காரர்கள் நிலைமையில்தான் இருக்கிறீர்கள். மற்றவர்கள் உங்கள் மீது அன்பு செலுத்த வேண்டும் என்று விரும்புகிறீர்கள். ஆனால் நீங்கள் மற்றவர்களுக்கு அன்பைக் கொடுப்பதில்லை. உங்களுடைய அன்பு எதிர்பார்ப்புக்கள் நிறைந்தது.

ஆனால் காரணம் இல்லாத அன்பு- அதாவது Cause less Love என்று ஒன்று இருக்கிறது. அந்த அன்புக்கு காரணம் எதுவும் கிடையாது. நான் குறிப்பிடும் அன்பு அத்தகைய அன்புதான். அத்தகைய அன்பை நீங்கள் கண்டுபிடித்தால் மட்டுமே நீங்கள் சத்தியலோகத்தில் நுழைய இயலும். இல்லையென்றால் நுழைய இயலாது.

உங்களைக் கூர்ந்து நோக்கி ஆராய்ந்தால் நீங்கள் எத்தகையவர் என்பது உங்களுக்குத் தெளிவாகும். அதுவே உங்கள் உண்மை இயல்பு ஆகும். இதனை உணர்ந்தால் உலகத்தை வேறு கண்ணோட்டத்துடன் காண இயலும். இப்பொழுது உங்களுக்கு தெரிந்ததெல்லாம் பற்று ஒன்றுதான். கூர்ந்து பார்த்தால் உங்கள் உறவுமுறை மீது நீங்கள் வைத்திருப்பது வெறும் பற்றுதான் என்பதைத் தெளிவாக உணர்வீர்கள்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### சகோதரராக நடத்துங்கள்



- மனிதனுக்கு கடவுள் அளித்திருக்கும் இந்த உடல் மகத்தானது. அதை ஒரு நரகக்குகையாக ஆக்குபவன் மன்னிக்க முடியாத குற்றவாளி.
- யாரைப் பற்றியாவது கோள் மூட்ட ஒருவன் வந்தால், அதற்கு சிறிதும் செவி சாய்ப்பது கூடாது. பிறரைப் பற்றிய தவறான விஷயங்களைக் கேட்பது பெரும்பாவம்.
- மனத்தளர்வு வெற்றிக்கு வழிவகுக்காது. எப்போதும் உள்ளத்தில் உறுதியும், உதட்டில் புன்னகையும் கொண்டிருப்பவனே கடவுளுக்கு விருப்பமானவன்.
- நற்செயலில் ஈடுபடுபவருக்கு கைகொடுக்க தயாராகுங்கள். ஒவ்வொரு மனிதனையும் உங்களின் சகோதரராக நடத்துங்கள்.
- தன்னலத்துடன் வாழ்பவன், புண்ணியத்தலம் அனைத்தையும் தரிசித்தாலும் கூட கடவுளுக்கு மிகத் தொலைவில் இருப்பவனே.
- அடக்கப்படாத மனம், மனிதனை கீழ்நோக்கி இழுத்து சென்று விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பருத்தித்துறை பிரதேச செயலகம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவில் ஆண், பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இப் போட்டியில் வெற்றிபெற்ற கழகுகள் விளையாட்டுக்கழகத்தினரை படங்களில் காணலாம். (படங்கள்: தும்பளைச் செய்தியாளர்)

## வவுனியா பிரதேசமட்ட வி.விழா; ஹெனிக்பாம் பீனிக்ஸ் சம்பியன்



வவுனியா வெங்கலச் செட்டிகுளம் பிரதேசமட்ட உள்ளூர் இளைஞர் கழகங்களுக்கிடையிலான மாபெரும் விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை பிரதேச இளைஞர் உத்தியோகத்தர் ரா. சசிகரன் தலைமையில் செட்டிகுளம் திறந்த வெளியரங்கில் இடம் பெற்றது.

கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் பதிவுசெய்யப்பட்ட 32 கழகங்களுக்கிடையில் ஆண்.பெண் இருபாலாருக்குமான மெய் வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்றது.

இவ் விளையாட்டு விழாவில் புள்ளிகள் அடிப்படையில் அணிகளின் வெற்றி தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் மெனிக்பாம் பீனிக்ஸ் இளைஞர் கழகம் 168 புள்ளிகளைப் பெற்று 2014ஆம் ஆண்டிற்கான கிண்ணத்தினை சுவீகரித்தது.

இலுப்பைக்குளம் அடைக்கலமாதா இளைஞர் கழகம் 96 புள்ளிகளை பெற்று இரண்டாம் இடத்தையும் செட்டிகுளம் கலைமகள் இளைஞர் கழகம் 88 புள்ளிகள் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

இந்நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், விநோநோதராதலிங்கம் மற்றும் வவுனியா மாவட்ட தேசியஇளைஞர் சேவை மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் சிசில் செனவிரத்ன. வ்வுனியா மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எம். சுகானி. மாவட்ட சம்மேளனத் தலைவர் எஸ். அமுதராஜ். பிரதேச செயலக உத்தியோகத்தர்கள். இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் சி. நிருஜன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (க-266)

### உடுவில் பிரதேச இளைஞர் கழக

# வலைப்பந்தாட்ட போட்டி; குப்பிளான் விக்னேஸ்வரா சம்பியன்




வலி. தெற்கு உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப போட்டிகள் இடம்பெற்று வருகின்றது.

இதன் ஒரு அங்கமாக பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன.

இப் போட்டிகளின் இறுதிப் போட்டிக்கு இணுவில் கலையொளி இளைஞர் கழக அணியும் குப்பிளான் விக்னேஸ்வரா இளைஞர் கழக அணியும் தகுதி பெற்றது.

இப் போட்டியில் 17:8 என்னும் புள்ளிகள் அடிப்படையில் குப்பிளான் விக்னேஸ்வரா இளைஞர் கழக அணி வெற்றி பெற்றது.

இதன் மூலம் வலி. தெற்கு உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகளில் குப்பிளான் விக்னேஸ்வரா இளைஞர் கழக அணி சம்பியனாகியது. (க-23)

# வலிகாமம் வலய வலைப்பந்து; அராலி சரஸ்வதி சம்பியன்




வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்ற 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி சம்பியனாகியது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயமும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி முதல் பாதியாட்டத்தில் 9:2 என்ற புள்ளிகள் அடிப்படையிலும். இரண்டாம் பாதியாட்டத்தில் 9:4 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் முன்னிலை பெற்று. இறுதியில் 18:06 என்ற புள்ளிகள் அடிப்படையில் சம்பியனாகியது. (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்








திருநெல்வேலி சிமாற் கிட்ஸ் மாதிரி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் மழலைகளின் சத்தியப் பிரமாணத்தையும் இடைவேளையின் போது கராத்தே கண்காட்சியையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் போர்

# கொழும்பா யாழ்ப்பாணமா?



இந்துக்களின் போர் துடுப்பாட்டத்தில் இரு அணிகளும் தமது முதல் இன்னிங்ஸுக்காக நேற்றைய முதல் நாள் ஆட்டத்தில் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியுள்ளன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அணிகள் மோதும் இந்துக்களின் போர் துடுப்பாட்டப் போட்டிகள் நேற்று ஆரம்பமானது. போட்டியை வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆரம்பித்து வைத்தார்.

இரண்டு நாட்களைக் கொண்ட இந்துக்களின் போர் துடுப்பாட்ட போட்டியானது ஒருநாளில் 90





பந்துப் பரிமாற்றங்களை கொண்டமைந்த போட்டியாக காணப்படுகிறது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணித் தலைவர் ஜே.கல்கோகன் தமது அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடும் என அறிவித்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அணி தமது முதல் இன்னிங்ஸுக்காக அதிரடியாக ஆடி 39.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக யசோதரன் 60, கிரிசாந்த் 42, ஸ்ரீபன் 28 ஓட்டங்கள் எடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி சார்பாக மதுசன் 72 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், பானுகோபன் 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சிந்துஜன் 45 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடி வரும் யாழ்.இந்துக் கல்லூரி அணி நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவில் 48 ஓவர்களை எதிர்கொண்டு 6 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களை எடுத்துள்ளது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் ருக்ஷன் 32, மதுசன் ஆட்டமிழக்காமல் 31, அணித் தலைவர் கல்கோகன் 28, பானுகோபன் 26, சிவலிக்ஷன் 25 ஓட்டங்கள் எடுத்தனர்.

பந்துவீச்சில் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அணி சார்பில் கஜேந்திரன் 3, ஜசோதரன் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

போட்டியின் 2-வதும் இறுதியுமான நாள் ஆட்டம் இன்றாகும்.

யாழ்.இந்துக் கல்லூரி அணி 4 விக்கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில் 8 ஓட்டங்களால் பின்னிலையில் காணப்படுகிறது. (கு-23)

# இந்திய அணி வெற்றி




பாகிஸ்தானுக்கு எதிரான இருபது-20 உலக கிண்ண தொடரின் 'சூப்பர் 10' சுற்று போட்டியில் ஹோலி, ரெய்னா ஜோடியின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐந்தாவது இருபது-20 உலக கிண்ண தொடர் பங்களாதேஷில் நடக்கிறது. நேற்று 'சூப்பர் 10' சுற்று போட்டிகள் தொடங்கின. இதில் 'பிரிவு 2-ல் இடம்பெற்றுள்ள இந்திய அணி, தனது முதல் போட்டியில் பாகிஸ்தானை சந்தித்தது. நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணி அணித்தலைவர் தோனி களத்தடுப்பைத் தீர்மானித்தார். இந்திய அணியில் அமித் மிஸ்ரா இடம் பெற்றார்.

பாகிஸ்தான் அணிக்கு கம்ரான் அக்மல் (8) ஏமாற்றினார். ஜடேஜா சுழலில் ஹபீஸ் (15) சிக்கினார். மிஸ்ரா தன் பங்கிற்கு ஷேசாத்தை (22) வெளியேற்றினார். செகைப் மாலிக் 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

உமர் அக்மல் (33) அணிக்கு வலுச் சேர்த்தார். மசூத் 21 ஓட்டங்கள் எடுத்தார். அப்ரிடி (8) நிலைக்கவில்லை.

பாகிஸ்தான் அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 130 ஓட்டங்கள் எடுத்தது. இந்திய அணி சார்பில் மிஸ்ரா 2, புவனேஷ்வர், ஷமி, ஜடேஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். இந்திய அணிக்கு தவான், ரோகித் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது.

ஜுனைட் கான் பந்துவீச்சில் ரோகித் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார். அஜ்மல் சுழலில் ரோகித் (24) வெளியேறினார். யுவராஜ் (1) நிலைக்கவில்லை. இதன்பின் இணைந்த ஹோலி-ரெய்னா ஜோடி எதிரணியின் பந்துவீச்சை சிதறடித்தது. இந்திய அணி 18.3 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 131 ஓட்டங்கள் எடுத்து, 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. ஹோலி (36) ரெய்னா (35) ஆட்டமிழக்காமல் இருந்தனர். போட்டியன் ஆட்டநாயகனாக மிஸ்ரா தெரிவானார். (க)



சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான விருதினையும் சான்றிதழையும் வழங்கிய சுன்னாகம் நகர் வடக்கு கிராமசேவையாளர் திருமதி தி.சசிகலா [illegible]

# அமெரிக்க பிரேரணை...

தீர்மானித்திருப்பது இது மூன்றாவது தடவையாகும். இராஜதந்திர மற்றும் அரசியல் எண்ணப்பாடுகளை மனதிற் கொண்டே குறித்த தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் மத்தியில் சுற்றி அனுப்பட்டுள்ள மேற்படி பேரவையின் 25 ஆவது கூட்டத்தொடருக்கான தீர்மான வரைவின் பெரும்பாலான மற்றும் கணிசமான அளவிலான அம்சங்கள் சரியாகவுள்ளன என தெரிவித்துள்ள அதேசமயம் மனித உரிமை மீறல்கள் மற்றும் அவற்றுடன் தொர்டர்புடைய குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான சுயாதீனமானதும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான சர்வதேச விசாரணையொன்றின் தேவைப்பாட்டைக் கோரும் பிரேரணையின் 8 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடுஞ்சொற்பிரயோகத்தை தணிவிப்பது குறித்து பேச்சுகள் இடம்பெற்று வருவதாக இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா, மொண்டிநீக்ரோ, மசிடோனியா மற்றும் மொரீசியஸ் ஆகிய நாடுகளால் கொண்டுவரப்பட்டுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவை பிரேரணையானது இந்தியா கரிசனை காட்டி வரும பல விடயங்களின் மீது கவனஞ் செலுத்துவதனாலேயே புதுடில்லி அதற்கு முற்று முழுதாக ஆதரவை வழங்கி வருவதாகவும் மேற்படி வட்டாரங்கள் தெரிவித்தன. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதியான விசாரணை...

ஆசிரியர் நிரூபன் காணாமல்போய் ஆறு மாத காலத்தின் பின்னர் சடல எச்சமாக அடையாளம் காணப்பட்டார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட நிரூபனுக்கு நடந்தது என்ன என்பதனை அறிய நீதி விசாரணை நடத்தக் கோரியும் மனித உரிமை செயற்பாட்டாளர்களான அருட்தந்தை றுக்கி பெர்னான்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன் மகேசன் ஆகியோர் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே இவ்வார்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது. அரசுக்கெதிரான இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆசிரியர்கள் தமது கைகளில்,

ஆசிரியர் நிரூபனை கொன்றவர்களைக் கண்டுபிடி, மனித உரிமைகளை மிதிக்காதே!, மக்கள் வாழ்வை ஒடுக்காதே!, உயிர் வாழ்வதற்கு உத்தரவாதம் வழங்கு!, ஒடுக்கு முறைகளினால் உயிர்களைப் பறிக்காதே!, ஆசிரிய சமூகத்திற்கு அச்சுறுத்தல் எதற்கு? விசாரணை கேட்கின்றோம்; விசரனைப் போல் நடத்தாதே!, விசாரணை வேண்டும் அதுவும் நீதியான விசாரணை வேண்டும், நீதி கேட்பவர்களை கைது செய்து பழிவாங்காதே! என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

மேலும் புதைகுழி அரசியல் எமக்கு வேண்டாம், காவல்துறை எங்கே கண்மூடியா இருக்கின்றாய்?, ஆசியாவின் அதிசயம் எலும்புகளின் களஞ்சியசாலையா?, இலங்கை எலும்புக்கூடுகளின் நாடா? என்ற கோஷங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மத்திய பேருந்து நிலையம் முன்பாக இம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டம் பெருமளவிலானோரின் பங்கேற்புடன் கண்டணப் பேரணியாகவும் இடம்பெற்றது.

இவ் ஆர்ப்பாட்டத்திற்கு பொலிஸார் எவ்வித தடை விதிக்காதபோதிலும் புலனாய்வாளர்களின் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

இப்போராட்டத்தில் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்சங்கம், விஞ்ஞான ஆசிரியர் சங்கம், ஊழியர் சங்கம், புதிய ஜனநாயக மார்க்ஷிச லெனினிச கட்சி மற்றும் பொது நிறுவனங்கள் சார்ந்தோரும் பங்கு கொண்டிருந்தனர்.

இவ் கண்டன பேரணி முடிவுறும் தருவாயில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் நிரூபன் கொலை செய்யப்படவில்லை அவர் தற்கொலை செய்தார் என எழுதப்பட்ட துண்டுப்பிரசுரங் களினை அங்கு எறிந்து விட்டுச் சென்றுள்ளனர்.

இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டதோடு இவ் வாறு துண்டுப்பிரசுரங்களினை எறிந்தவர்கள் நிரூபனை கொன்றவர்களே என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளதோடு எறியப்பட்ட அநாமதேய துண்டுப் பிரசுரங்களும் தீயிட்டு கொழுத்தப்பட்டன. (செ-4)

## எனது மூன்று ...

தாகவும் முடிந்தபின் விடுவதாகவும் அவர்கள் கடுமையாகச் சொன்னார்கள்.

அதன் பின் எந்தத் தகவலும் இல்லை. கொழும்பு, களுத்துறை உள்ளிட்ட சிறைச்சாலைகள் உட்பட பல இடங்களிலும் எங்களது சகோதரங்களைத் தேடி அலைந்திருக்கிறோம். எந்தப் பிரயோசனமும் இல்லை. எங்கு சென்று கேட்டாலும் இல்லை என்றே சொல்கிறார்கள்.

அண்மையில் முறக்கொட்டான்சேனை இராணுவ முகாமிலிருந்து எங்களது வீட்டுக்கு வந்த இராணுவத்தினர் உங்களது சகோதரர்கள் இருக்கிறார்கள். அவர்களது பிறப்புச் சான்றிதழ்களைத் தாருங்கள் என்று கேட்டார்கள். நாங்கள் அவர்களது சான்றிதழ்கள் எல்லாம் வன்செயலில் அழிந்து போய் விட்டன என்றே சொன்னோம்.

எனது மூத்த சகோதரன் தேநீர் கடை வைத்து வியாபாரம் செய்து வந்தார். மற்றைய சகோதரர்கள் உயர்தரமும். சாதாரண தரமும் படித்துக் கொண்டிருந்தார்கள். எப்போது வருவார்கள் என்ற எதிர்பார்ப்புடனேயே இருந்து கொண்டிருக்கிறோம். அம்மா இப்போதும் என் பிள்ளை வருவான் என்றே சொல்லிக் கொண்டிருக்கிறார்.

இப்போதும் முறக்கொட்டான்சேனை இராணுவ முகாம் இருக்கிறது. எங்களது சகோதரங்கள்தான் இல்லை. அவர்கள் வீட்டுக்குத் திரும்புவதையே இப்போதும் எதிர்பார்க்கிறோம் என்றார்.

இந்த ஆணைக்குழுவின் விசாரணையின்போது கோறளைப் பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 64 விண்ணப்பங்களும், கோறளைப்பற்று வடக்கில் 214 விண்ணப்பங்களும் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 55 பேரது விடயங்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. (செ-11)

## மனித உரிமை...

ளைப்பறிமுதல்செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஜநாவின் மனித உரிமை பேரவையில் கடும் விமர்சனங்களை இலங்கை அரசு எதிர்கொள்ளும் இந்நேரத்தில் இந்த புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதே நேரத்தில் இலங்கையின் வடக்கு பகுதியில் பணியாற்ற வேலையற்ற இளைஞர்களை ஒன்றுதிரட்டி, தமிழ்ழ விடுதலைப் புலிகள் மீண்டும் இயங்க முயல்வதாக இலங்கை அரசு குற்றஞ்சாட்ட ஆரம்பித்திருக்கிறது. (செ-11)


இன்னும் 8 தினங்களில் மலிவான அரிய அபூர்வ வாய்ப்பு கை நழுவப்போகின்றது.

ஆம், வெறும் 23 இலட்சங்களுடன் மட்டும் கனடாவில் படிக்க உழைக்க உங்களுக்காக காத்திருக்கும் உன்னத சந்தர்ப்பம் இம்மாதம் 30 ஆம் திகதியுடன் கைவிட்டுச் செல்லப்போகின்றது. தாமதம் வேண்டாம் விரையுங்கள்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 2219016, 021 5689090

கணனி மலிவு விற்பனை

(19" LED, 2GB Ram, 250GB HDD)
Full Set Core 2 Duo Hp கணனி



29,750/=
ஒரு வருட உத்தரவாதம்
Free: Pendrive/Headphone/Webcam
ST. Antony's
187, K.K.S. Road, Jaffna Town
0750698608/0212224865

காணி விற்பனைக்குண்டு

சாவகச்சேரி தனங்கிளப்பு சந்திக்கு அண்மையில் உள்ள பனங்காய் குளவயல் காணி 70 பரப்பு உறுதியுடன் விற்பனைக்குண்டு
தொடர்பு :
0776936744, 0716274916
(5832)

பணிப் பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டுக்கு நம்பிக்கையான பணிப்பெண் ஒருவர் தேவை. நாளாந்தம் 500/= சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:-0776564346
(ய-6769)

STUDY IN UK

- G.C.E O/L சித்தியடைந்திருந்தலே போதும்.
- அரச கல்லூரிகளில் பட்டப்படிப்பு.
- வேலை செய்து படிக்கக்கூடிய அரிய வாய்ப்பு.
- City&Guilds English B1 அல்லது IELTS பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

April/May/Sep Intake open now

City & Guilds Approved Centre

பரீட்சையின் பின்னர் UK நாட்டின் Diploma சான்றிதழை பெற்று லண்டன் கல்லூரிகளில் உயர் கல்வியை தொடர முடியும் மற்றும் லண்டன் நாட்டில் குடிபெயர முடியும்.

கடந்த 7 மாதங்களில் மட்டும் எமது நிறுவனத்தினூடாக 40 மாணவர்களிற்குமேல் City&Guilds English Diploma (UK) A1,B1 பரீட்சையில் சிறந்த,அதிசிறந்த பெறுபேறுகளை தட்டிச்சென்றுள்ளனர்.

City&Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சிபெற்ற மேல்மாகாண ஆசிரியரின் வழிகாட்டலில் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றது.

WEC நிறுவனத்தினர் தற்பொழுது யாழ்நகரிலும் தமது IELTS, City&Guilds (A1,B1), German Deutsch, French வகுப்புக்களினை ஆரம்பித்துள்ளனர்.

*Visit to Europe!!!*

- 2 Weeks visit
- after visa payment
- get to just 2 or 3 weeks embassy processing...
- genuine visa.....
- You can go to FRANCE, SWISS, GERMAN, POLAND, NORWAY.....

WORLD EDUCATION CONSULTANCY
No:377, Sangaththanai, Chavakachcheri.
021 7200 989; 0779265447

Branch:
No.04, Kesavil Road, Kokkuvil, Jaffna.

BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

Spoken English With Grammar - Quick Learning Course (1 ½ Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Diploma In English (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

IELTS
Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 ½ Months

BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

| Batch I | Batch II | Batch III | Batch IV |
|---|---|---|---|
| 22.03.2014 | 24.03.2014 | 29.03.2014 | 31.03.2014 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel.024 ...

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 077...
(C-6798)

Personal and Group Classes
Yoga
யோகாசனம்





ஆரோக்கிய வாழ்வுக்கான நல்மருந்து
Coures Name:Certificate in Yoga & Relaxation Techniques
Coures Duration:03 Months
Training Center:Yoga Training Hall
Persanal and Group Educational Training College
Mathavady Lane-Kondavil East
Lecturer By:Mr.K.N.Mugunthan(Certificate in Yoga & Relaxation Techniques)
University of Kelaniya-Sri-Lanka
0718617972
0718617972


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.